# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஐப்பசி 22 வியாழக்கிழமை (08.11.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 342


### முகமாலையில் மூன்று மணி நேரம் கடும் மோதல்!

## முன்னகர்வு முறியடிப்பு என புலிகள் தரப்பு அறிவிப்பு

## 5 கி.மீற்றர் முன்னேறிவிட்டதாக இராணுவம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.8

நேற்று அதிகாலை 5 மணி தொடக்கம் காலை 8 மணி வரை முகமாலை - கிளாலிப் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடுஞ்சமர் நடைபெற்றது.

இந்த மோதலின்போது தாம் ஐந்து கிலோ மீற்றர் முன்னேறி புலிகளின் முன்னரங்கப் பகுதிகளுக்குள் உட்புகுந்ததாக இராணுவத் தரப்பில் நேற்று நண்பகல் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் படையினரை முன்னேற விடாது கடும் தாக்குதல் நடத்தி முன்நகர்வு முயற்சியைத் தாம் முறியடித்து விட்டதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

**20 படையினர் பலி**

நேற்றைய சமரின்போது 20 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் 100 பேர் வரை காயமுற்றதாகவும் விடுதலைப் புலிகள் மேலும் தெரிவித்தனர்.

தமது தரப்பில் ஒருவர் வீரச்சாவடைந்ததாகவும் இராணுவத்தினரிடமிருந்து பெரும் எண்ணிக்கையான போர்க்கலங்கள் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும் அவர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

**52 புலி உறுப்பினர் பலி**

நேற்றை மோதலில் தமது தரப்பில் 11 இராணுவத்தினர் பலியானதாகவும் 41 பேர் காயமுற்றதாகவும் -

அதேவேளை விடுதலைப் புலிகளின் பதுங்குகுழிகளை அழித்தபோது அதில் 52 புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர் என்றும் பலர் காயமடைந்தனர் என்றும்- படைத்தரப்பு அறிவித்தது.

காயமுற்ற இராணுவத்தினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

நேற்யை மோதல்கள் குறித்து விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளதாவது:-

(12ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் பயங்கரவாதத்தை

# பூண்டோடு அழிப்பதே ஒரே வழி!



## பட்ஜெட் பேச்சில் மஹிந்த சூளுரை

கொழும்பு, நவம்பர் 08

நாட்டில் நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமானால் தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத்தை முற்றாக - பூண்டோடு - ஒழித்துக்கட்ட வேண்டும் என சூளுரைக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அதைத்தவிர தமது அரசுக்கு வேறு மார்க்கமில்லை. அதுவே ஒரே வழி - என்றும் அவர் கூறினார்.

தமது அரசின் மூன்றாவது வரவு - செலவுத் திட்டத்தை நிதி அமைச்சர் என்ற முறையில் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் இப்படிக் கூறினார்.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை 9.40 மணிக்கு சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டார தலைமையில் கூடியது.

சரியாக 9.45 மணிக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சபைக்குள் பிரவேசித்தார். சபையில் பிரதமரின் ஆசனத்தில் அவர் அமர, பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க சபை முதல்வரின் ஆசனத்தில் அமர்ந்துகொண்டார்.

பின்னர் சபாநாயகரின் அறிவித்தலைத் தொடர்ந்து ஜனாதிபதி தனது வரவு - செலவுத்திட்ட உரையை ஆரம்பித்தார்.

கடந்த வருடத்தைப் போன்றே இம்முறையும் தனது வரவு - செலவுத்திட்ட ஆலோசனைகளை அவர் பெட்டியில் வைத்து எடுத்துவரவில்லை. கையடக்கமான ஒரு 'பைல்' கட்டுக்குள் கொண்டு வந்த வரவு - செலவுத்திட்ட ஆலோசனைகளை ஜனாதிபதி சமர்ப்பித்தார்.

ஜனாதிபதி சபைக்குள் பிரவேசித்தபோது ஆளும்கட்சி உறுப்பினர்கள் எழுந்துநின்று மேசைகளைத் தட்டி ஆரவாரமாக வரவேற்றனர்.

எதிரணியில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பியினர் ஜனாதிபதியின் வருகையைச் சட்டை செய்யாமல் ஆசனத்தில் அமர்ந்திருந்தனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

**வரவு - செலவுத் திட்டம் ஒரே பார்வையில்.....**

| | |
|---|---|
| மொத்தச் செலவினம் | - ரூ. 104 ஆயிரத்து 418 கோடி |
| மொத்தச் வருமானம் | - ரூ. 75 ஆயிரத்து 74 கோடி |
| துண்டு விழும் தொகை | - ரூ. 29 ஆயித்து 344 கோடி |
| துண்டு விழும் தொகையைச் சமாளித்தல்: | |
| வெளிநாட்டு நிதியில் | - ரூ. 13 ஆயிரத்து 864 கோடி |
| உள்நாட்டு நிதியில் | - ரூ. 15 ஆயிரத்து 480 கோடி |

(* வரவு - செலவுத் திட்ட புதிய அறிவிப்புகள் 11ஆம் பக்கத்தில்)




## ஏ-9 பாதையில் நேற்று காலை முதல் பரபரப்பு

யாழ்ப்பாணம்,நவ.8

முகமாலையில் நேற்று நடந்த மோதல் காரணமாக ஏ-9 பாதையில் வாகனங்கள், அம்புலன்ஸுகள் அடிக்கடி ஓடித்திரிந்ததால் மக்களிடையே பெரும் பரபரப்புக் காணப்பட்டது.

முகமாலை மோதலில் காயமடைந்த படையினர் அம்புலன்ஸுகள் மூலம் பலாலிக்கு எடுத்துச்செல்லப்பட்டனர். அதனால் அந்தப் பாதையூடான போக்குவரத்து தடை செய்யப்பட்டிருந்தது.

பல மணிநேரத்திற்கு ஒருதடவை பாதையைக் கடக்கப் படையினர் அனுமதி வழங்கினர்.

போக்குவரத்துத் தடைசெய்யப்பட்டதால் வாகனங்கள் வேறுபாதையூடாகச் சென்றன.

வழமையைவிட நீண்டநேரம் மக்கள் வீதியில் காத்துக் கிடந்து வீதியைக் கடக்க நேரிட்டது. (அ-1)

## போலியான இராஜதந்திர கடவுச்சீட்டு வழங்கி கருணாவைக் லண்டனுக்குக் கடத்தியது அரசு!

### கோகுல குணவர்த்தனா என்ற பெயரில் ஹீத்ரோ விமான நிலையத்தில் அவர் இறங்கினார்

கொழும்பு, நவ.8

போலி இராஜதந்திரக் கடவுச்சீட்டு ஒன்றை வேறு ஒரு சிங்கள நபரின் பெயரில் வழங்கி, கருணாவை பிரிட் டனுக்கு இலங்கை அரசே களவாகக் கடத்தியிருக்கின்றது.

இந்த அதிர்ச்சி தரும் தகவலுக்கு சான்றாதாரங்கள் கிடைத்திருக்கின்றன என 'த மோர்னிங் லீடர்' பத்திரிகை பரபரப்புச் செய்தி வெளியிட்டிருக்கின்றது.

உயர் அதிகாரி ஒருவரின் உத்தரவின் பேரில், கடந்த ஓகஸ்ட் 30ஆம் திகதி கோகில குணவர்த்தனா என்ற பெயரில் போலியான இராஜதந்திரக் கடவுச்சீட்டு ஒன்று குடிவரவுத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டிருக்கின்றது என்பது 'த மோர்னிங் லீடரின்' விசாரணைகளில்

(12ஆம் பக்கம் பார்க்க)

### தமிழ்ச்செல்வனின் கொலையைக் கண்டித்து

## சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்தை முற்றுகையிட முயன்றோர் நேற்றுக் கைது!

சென்னை,நவ.8

பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனின் படுகொலையைக் கண்டித்து சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகத்தை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் தா.செ.மணி தலைமையில் நூற்றுக்கு மேற்பட்ட இளைஞர்கள் இந்த முயற்சியில் நேற்று ஈடுபட்டனர்.

இலங்கை அரசுக்கு எதிராகக் கோஷங்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுத்தலைவர் இன்று கிளிநொச்சி செல்கின்றார்

### நடேசனுடன் முக்கிய சந்திப்பு

கொழும்பு,நவ.8

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ஜோன் சொல்பேர்க் இன்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்கின்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் உட்பட முக்கிய தலைவர்களை அவர் சந்தித்து தற்போதைய பதற்றநிலை குறித்து பேச்சுக்களை நடத்துவார்.

கடந்த வெள்ளிக் கிழமை இலங்கை விமானப்படையின் விமானத் தாக்குதலில் முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர்

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

மனோகரன்-வசந்தமாலா
தம்பதியரின் செல்வப் புதல்வன்
அரன்
இன்று(08.11.2007) வியாழக்கிழமை
கைதடியிலுள்ள தனது இல்லத்தில் முதலாவது
பிறந்த நாளை வெகு விமரிசையாகக்
கொண்டாடுகின்றார்.
அரன் குட்டியை அப்பா, அம்மா, தாத்தா,
அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார்,
சித்திமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார்,
மச்சாள்மார் அனைவரும் கைதடி வீரகத்திப்
பிள்ளையாரின் அருள் பெற்று சகல
செல்வங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க
என வாழ்த்துகின்றோம்.

(37742)

08 . 11 . 2007




கைதடி கிழக்கு, கைதடி. தகவல்: பெற்றோர்.

# 2 ஆவது பிறந்த தின வாழ்த்து






சுவிஸ்லாந்தில் வசிக்கும்
ஜெயேந்திரா-விஜிதா தம்பதியினரின் செல்வப்
புதல்வன்
கிஷான்
தனது இரண்டாவது பிறந்தநாளை இன்று
(08.11.2007) சுவிஸில் தனது இல்லத்தில் வெகு
விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
கிஷான் செல்வத்தை அம்மப்பா, அம்மம்மா,
அப்பப்பா, அப்பம்மா மற்றும் மாமா (டோகா),
பெரியம்மா, சிவனேசா மற்றும் உறவினர்கள்,
நண்பர்கள் அனைவரும் இறைவன் ஆசியோடு
பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

சங்கானை மேற்கு,
நிற்சாமம்
(67629)

தகவல்:
சின்னப்பு சுப்பிரமணியம்
(தாத்தா - புகையிலை வியாபாரி)

## மாவையில் கந்தசஷ்டி நிகழ்வுகள்

மாவிட்டபுரம் கந்தசாமி கோயிலில் கந்த சஷ்டி விரதத்தை ஒட்டி அபிஷேக ஆராதனைகள் நாளை மறுதினம் சனிக்கிழமை தொடக்கம் இடம்பெறவுள்ளன.

இந்த ஆராதனை நிகழ்வுகளில் பங்குபற்றவரும் பக்தர்களுக்கு விசேட போக்குவரத்து வசதிசெய்யப் பட்டுள்ளது.

பக்தர்களை காலை 9.30 மணிக்கு தெல்லிப்பழை சோதனை நிலையத்திற்கு வருகை தருமாறு ஆலய ஆதீனகர்த்தா கோரியுள்ளார். ஆலயத்தில் இருந்து பிற்பகல்1.30மணிக்குத் திரும்புவதற்கு போக்குவரத்துவசதி செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (அ-1)

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

931 நீலம்

வெற்றி இலக்கங்கள்

மேடம்

**10 22 47 52**

**06-11-2007**

செல்லுபடியாகும் தொடர் இல. 4407451- 4422550

ஜக்பொட் பரிசு ரூபா.1,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 330,578 | 10/- | 3,305,780/- |
| 2 இலக்கங்கள் | 30,318 | 20/- | 606,360/- |
| 1 இல. + லக்கினம் | 30,013 | 30/- | 900,390/- |
| 2 இல. + லக்கினம் | 2,748 | 100/- | 274,800/- |
| 3 இலக்கங்கள் | 799 | 500/- | 399,500/- |
| 3 இல. + லக்கினம் | 84 | 5,000/- | 420,000/- |
| 4 இலக்கங்கள் | 5 | 100,000/- | 500,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,000,000/- | - |
| மொத்தம் | | | 6,406,830/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 394,550 | | 7,430,330/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,738,050/-

தொடர் இல. 3297799 க்கு மேற்பட்ட சீவயு நிற டிக்கட்டுக்கள் 2007 நொவெம்பர் 09 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில்
பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில்
முச்சக்கரவண்டி வெற்றி பெறும்
ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| அம்பாறை | 4412085-6-87 |
| திருகோணமலை | 4412666-9-15 |
| பதுளை | 4411400-1-54 |
| இரத்தினபுரி | 4418935-9-98 |
| ஹம்பாந்தோட்டை | 4410511-8-57 |

# மனோதர்ம வித்தகிக்கு மனோலய ஆராதனைகள்

திருமதி
**பரஞ்சோதி சாரதா**
(இசை ஆசிரியை,
இசைக்கலைமாணி, கலாவித்தகர்,
நுண்கலைப்பீட முன்னாள் இசை
விரிவுரையாளர்,
முதல்தர வானொலிப் பாடகர்)



மனோதர்ம இசைக்கு மாநிலத்தில் மகுடம்சூட்டிய
மாண்புறு வித்தகிக்கு மௌன ஆராதனைகள்.
சங்கீத உதவிக் கல்விப் பணிப்பாளர்,
நடன ஆசிரிய ஆலோசகர், சங்கீத நடன ஆசிரியர்கள்
வலிகாமம் கல்வி வலயம்.

# நகரில் வாகன நெரிசல்; வயோதிபர் விபத்தில் காயம்

யாழ்ப்பாணம்,நவ.8

தீபாவளியை முன்னிட்டு தமது அலுவல்களுக்காக நகரப் பகுதியில் கூடியவர்களால் ஏற்பட்ட நெரிசலின்போது வயோதிபர் ஒருவர் நேற்றுக்காலை 9மணியளவில் விபத்துக்குள்ளாகி காயமடைந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டுள்ளார்.

யாழ்.மின்சார நிலைய வீதியில் கஸ்தூரியார் வீதிச் சந்திக்கு சமீபமாக இடம் பெற்ற விபத்துச்சம்பவத்தில் கோண்டாவிலைச்சேர்ந்த வேலாயுதம்(வயது78) என்ற வயோதிபர் காயமடைந்தார்.

தீபாவளிக் கொண்டாட்டத்துக்காகப் பொருள்களைக் கொள்வனவு செய்ய பெரும் எண்ணிக்கையானவர்கள் நேற்று நகரில் கூடினர். அதனால் அங்கு வாகன நெரிசல் உண்டானது.

அப்போது சைக்கிளில் வந்து கொண்டிருந்த சம்பந்தப்பட்டவரும் போக்குவரத்து சபை பஸ் ஒன்றும் மோதுண்டதில் அவர்காயமடைந்தார். (அ-1-202)

# மரண அறிவித்தல்

## திருமதி மீனாம்பாள் முத்தையா



கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் சப்பல்வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மீனாம்பாள் முத்தையா நேற்று (07.11.2007) புதன் கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் கந்தர்மடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற சரவணமுத்து முத்தையாவின் அன்பு மனைவியும் காலஞ் சென்றவர்களான செல்லத்துரை - வள்ளியம்மைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் திருமதி விக்னேஸ்வரி (வைத்திய பொறுப்பதிகாரி, அரசினர் ஆயுள் வேத வைத்தியசாலை - கைதடி), விக்னராஜன் (DOA, மாநகர சபை, கொழும்பு), காலஞ்சென்ற திருமதி மங்களகௌரி (ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு தாயும் கைலாசபதி (ஓய்வு பெற்ற கட்டடப் பொறியியலாளர்), திருமதி அருந்தவராணி, புவனேஸ்வரன் (நில அளவையாளர் - வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியும் பாலவள்ளி(4ஆம் வருட மருத்துவபீடம்), பாலசங்கர் (2ஆம் வருட விஞ்ஞானபீடம்), ஜயந்தா (2ஆம் வருட விவசாயபீடம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் திருமதி சிவசக்தி குகமூர்த்தியின் அருமைச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (8.11.2007)வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 3மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S.M.விக்னராஜன்
(மகன்).
2229327
(67753)

# கண்ணீர் அஞ்சலி

தேசிய கல்வி நிறுவக யாழ். பிராந்திய நிலையக் கல்விமாணிப் பட்டக் கற்கை நெறி இறுதியாண்டு ஆசிரிய மாணவி

## திருமதி பவானி பிரபானந்தன்

அவர்களின் மரணச் செய்தியறிந்து அதிர்ச்சியும், வேதனையும் அடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தவர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆன்மா சாந்தியடையவும் சிவன் பாதம் வேண்டுகின்றோம்.

தேசிய கல்வி நிறுவக நிலையம்
யாழ். இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.
(67744)

தேசிய கல்வி நிறுவக யாழ்.பிராந்திய
நிலைய இணைப்பாளர்,
விரிவுரையாளர்கள்,
சக ஆசிரிய மாணவர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## செல்வி செல்லத்துரை விமலாதேவி

(Retired Ground Water Analyst, Irrigation Department)

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, ஐயனார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் தெகிவளை, இரண்டாம் ஒழுங்கை, இல. 53 ஐ வதிவிடமாகவும் கொண்ட செல்வி செல்லத்துரை விமலாதேவி (06.11.2007) செவ்வாயன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் 'செல்லத்துரை (அளவெட்டி/ஓய்வுபெற்ற ஆசிரியர், பரமேஸ்வராக் கல்லூரி), காந்திமதி தம்பதிகளின் மகளும், புஷ்பகாந்தி (ஓய்வுபெற்ற ஆசிரியை, யாழ்.இந்து மகளிர் கல்லூரி), கமலாதேவி (ஓய்வுபெற்ற இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்), காலஞ்சென்ற நித்தியானந்தன் (பிரதம பொறியியலாளர், மகாவலி அபிவிருத்திச் சபை), இராசஇராசேஸ்வரி (Save The Children in Sir Lanka) ஆகியோரின் சகோதரியும் சோதிலிங்கம் (ஓய்வுபெற்ற மொழிபெயர்ப்பாளர்), காலஞ்சென்ற சிவசிதம்பரம் (பரிஸ்ரர், கரவெட்டி) ஆகியோரின் மைத்துனியும் செந்தூரன் (Associate Vice President, Amba Research Ltd, Colombo), காயத்திரி (புனர்வாழ்வு, அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு, கொழும்பு) ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் (08.11.2007) வியாழக் கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12மணியளவில் கனத்தை மயானத்தில் பூதவு டல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

இல.53, இரண்டாம் ஒழுங்கை,
தெகிவளை.
தொ.பே:- 011-2714363
(சி/54297)

தகவல்:
குடும்பத்தினர்.

## வேலுப்பிள்ளை சண்முகலிங்கம்



திருநெல்வேலி கிழக்கை வசிப்பிடமாகக் கொண்ட வேலுப்பிள்ளை சண்முகலிங்கம் 06.11.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இரத்தினத்தின் அன்புக் கணவரும் சபேசலிங்கம் (இலங்கை மின்சார சபை), சாந்தலிங்கம் (பிரான்ஸ்), சத்தியலிங்கம் (PHFO அரசினர் வைத்தியசாலை, கோப்பாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சின்னத்துரை, காலஞ்சென்றவர்களான குருநாதர், இராமலிங்கம், முத்தம்மா, பாலையா ஆகியோரின் அன்புச் சகோதரரும் நாகபூசனி (குழந்தை), குமுதினி (சித்திரா), வதனி ஆகியோரின் மாமனும் 'வரூன், திரிஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 06.11.2007 செவ்வாய்க் கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சேச் லேன்,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
T.P.: 077 9116373
(67744)

தகவல்:
ச.சபேசலிங்கர்
(மகன்).

## சத்துருலிங்கம் திருச்செல்வம் (சொக்கர்)

குப்பிழானைச் சேர்ந்த சத்துருலிங்கம் திருச்செல்வம் (சொக்கர்) நேற்று (07.11.2007) புதன்கிழமை காலமானார்.

இவர் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சறோயினிதேவி (சுவிஸ்), கிருஷ்ணகுமார் (சிறுவர் உரிமைகள் உத்தியோகத்தர், நுவரெலியா பிரதேச செயலகம்), காலஞ்சென்ற சந்திரகுமார் மற்றும் பத்மாவதி ஆகியோரின் அருமைத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

குப்பிழான் தெற்கு, ஏழாலை.
(67745)

தகவல்
மனைவி

## தம்பியய்யா கந்தசாமி

**(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், நிலஅளவைத் திணைக்களம்)**

மாதகலைப் பிறப்பிடமாகவும் மயிலங்கூடல், இளவாலையை வதிவிடமாகவும் கொண்ட, தம்பியய்யா கந்தசாமி நேற்று (07.11.2007) புதனிகிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பியய்யா - நாகம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற வள்ளிபுரம் மற்றும் பசுபதி தம்பதியரின் மருமகனும், தெய்வேந்திரத்தின் கணவரும், காலஞ்சென்ற சாந்தினி (ஆசிரியை, யா/ இளவாலை மெய்கண்டான் ம.வி.) மற்றும் மோகனதாஸ், வசந்தினி, சுமதினி (பிரான்ஸ்), வசந் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும், ஆனந்தராசா, ஜெயாயினி, தர்மலிங்கம், தனபாலசுந்தரம் ஆகியோரின் மாமனும், செல்வரட்ணம், தங்கம்மா, சண்முகலிங்கம், கமலாதேவி, யோகேஸ்வரி, நாகேஸ்வரி, மயில்வாகனம், துரைராஜா, தங்கேஸ்வரி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.11.2007) வியாழக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் முற்பகல் 1 மணியளவில் முள்ளானை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இளவாலை வடக்கு,
இளவாலை.
(67750)

தகவல்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கௌரவிப்பு விழா

வடமராட்சி, நவ. 8

பருத்தித்துறை மேலைப்புலோலி சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம் நடத்தும் அமரர் தர்மகுலசிங்கம் ஞாபகார்த்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா இன்று தீபாவளி தினத்தன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிலையத்தலைவர் ந. தங்கராசா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் சி. பசுபதி பிரதம விருந்தினராகவும் வடமராட்சி கல்வி வலய பிரதம எழுதுவினைஞர் ஆ. புண்ணியமூர்த்தி சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வார்கள். (1-160)

# சுன்னாகம், கந்தரோடைப் பகுதியில் 27 பேர் 'டெங்கு' காய்ச்சலால் பாதிப்பு

வலி. வடக்கு, நவ. 8

கந்தரோடை, சுன்னாகம் மத்தி, நகரப் பகுதிகளில் 27 பேர் டெங்கு காய்ச்சலுக்கு உள்ளாகினர் எனக் கண்டறியப்பட்டுள்ளதாக தெல்லிப்பழை பிரதேச சுகாதார பணிமனை வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த இரு வாரங்களாகப் பெய்துவரும் மழையைத் தொடர்ந்து அதிகளவில் வெள்ளம் வீட்டு வளவுகள் உட்பட தரவைகள் மற்றும் வெள்ள வாய்க்கால்களிலும் தேங்கிக் காணப்படுகின்றது.

இதேவேளை கந்தர்மடம், நீராவியடிப் பகுதிகளிலும் டெங்கு காய்ச்சலால் 17 இற்கும் மேற்பட்டவர்கள் பீடிக்கப்பட்டு உள்ளதாகவும் அறியக் கூடியதாகவுள்ளது.

டெங்கு நோய் பரிசோதனை உபகரணங்கள் மற்றும் மருந்து வகைகள் வைத்தியசாலைகளில் போதியளவு இல்லாததால் தனியார் ஆய்வு கூடங்களிலேயே உரிய பரிசோதனைகள் மேற்கொள்ள வேண்டியதாக உள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளார்கள். (86)

## நெற் பயிர்களில் எரிபந்த நோய் தாக்கம்

கல்லுண்டாய் பகுதிகளிலுள்ள நெல் வயல்கள் சிலவற்றில் நெற் பயிர்களுக்கு எரிபந்த நோய் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல ஆயிரம் ரூபா செலவில் பல ஏக்கர் நிலத்தில் முளைத்து வந்த நெற்பயிர்களுக்கு இந்நோய் பீடித்துள்ளதால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

தற்போது இந்நோயை கட்டுப்படுத்துவதற்குசில மருந்து வகைகளை தெளித்து வருவதாகவும் கமநலசேவை நிலையங்களில் ஆலோசனைகளைப் பெற்று வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# பண்டதரிப்பு சந்தைக்கு முன்பாகவுள்ள கழிவு நீர் வாய்க்கால் புனரமைக்கவில்லை

### தொற்றுநோய்கள் பரவும் அபாயம்

வலி. தென்மேற்கு, நவ. 8

பண்டத்தரிப்பு சந்தைக்கு முன்பாக உள்ள கழிவு நீர் செல்லும் வாய்க்கால் நீண்ட காலமாகப் பெரும் சேதடைந்து காணப்படுகின்றது. இதனால் கழிவு நீரும் வெள்ள நீரும் வழிந்தோட முடியாது வீதிக்கு பரவி வருகின்றது.

தற்போது குடாநாட்டில் 'டெங்கு', 'சிக்குன் குனியா' போன்ற வைரஸ் தொற்று நோய்கள் பரவும் அபாயம் உள்ளதாகச் சுகாதாரத் திணைக்களம் அறிவுறுத்தி வருகின்றது.

இந்நிலையில் இவ்வாய்க்கால் புனரமைக்கப்படாததால் தொற்று நோய்கள் பரவும் அபாயம் உள்ளது எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே இவ்வாய்க்காலை உடன் புனரமைப்புச் செய்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பண்டத்தரிப்பு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் என். நிர்மலானந்தன் கேட்டுள்ளார்.

இவ்விடயம் குறித்து பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கம் ஏற்கனவே வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கடிதம் மூலம் முறையிட்டிருந்தது. எனினும் இது வரை எந்த வித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை என விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (202-135)

## திக்கம் சனசமூக நிலையத்திற்கு நிதி ஒதுக்கீடு

பருத்தித்துறை திக்கம் சனசமூகநிலைய கிராம அபிவிருத்திச் சங்கம், திக்கம் மத்திய சனசமூக நிலையம் ஆகியவற்றின் அபிவிருத்திப் பணிகளுக்கென 3 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மாவை சேனாதிராஜா, எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபா வீதம் ஒதுக்கீடு செய்துள்ளனர். முன்பள்ளிக்கு மின்னிணைப்பு பெறல், நூல்கள் கொள்வனவு ஆகிய அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (202-218)

# தெல்லிப்பழை வைத்தியசாலைப் பகுதியில் நுளம்பின் பெருக்கம் அதிகரிப்பு

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் நுளம்பின் பெருக்கம் அதிகரித்துள்ளதால் நோய் பாதிப்பு அபாயம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அந்த வைத்தியசாலையில் பாவிக்காத நிலையில் உள்ள கட்டடங்கள் பராமரிக்கப்படாமையே நுளம்பின் பெருக்கம் அதிகரிக்கக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

யாழ். குடாநாட்டில் நுளம்பின் தாக்கத்தினால் டெங்குக் காய்ச்சல் பரவிவருவதாக சுகாதாரத் திணைக்களம், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றது.

இந்நிலையில் நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகிச் செல்லும் நோயாளர்களை நுளம்புகள் கடிப்பதனால் மேலும் தமக்கு நோய்கள் பரவலாம் என தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெறச்செல்லும் நோயாளர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

வைத்தியசாலை விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு நுளம்பு வலைகள் வழங்கப்படுகின்ற போதிலும் நேயாளர்களுடன் தங்கி நிற்பவர்கள் நுளம்பின் கடிகளுக்கு உள்ளாகி வருகின்றார்கள்.

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை இயங்கும் கட்டடப் பகுதியில் பல கட்டடங்கள் பராமரிப்பு இன்றிக் கிடப்பதனாலும், மலசலகூடக் குழிகள் காணப்படுவதினாலும் இங்கு நுளம்புகள் பெருக்கம் எடுக்கக் காரணமாக இருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

இதேவேளை-

வைத்தியசாலையில் காணப்படும் மலசல கூடங்களும் துப்பரவு இன்றியும் உடைந்து சேதமடைந்து காணப்படு கின்றமையும் சுட்டிக்காட்டக்கூடியதாகும்.(1)

## இன்றைய ஆட்டம்

மானிப்பாய் றெட்றேஞ்சர் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாணம், வலிகாமம் உதைபந்தாட்ட லீக்குகளின் அனுசரணையுடன் நடத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று வியாழக்கிழமை மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்தில் மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் அராலி ஏ. எல். விளையாட்டுக் கழக அணியும் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழக 'பி' அணியும் மோதுகின்றன. (50-86)

# வடக்கில் மனிதாபிமான படை நடவடிக்கை என்றால் அங்கு 'மல்ரிபரல்'கள் உபயோகிக்கப்படுவது எதற்காக?

### ஐ.தே.கட்சியின் லக்ஷ்மன் செனவிரட்ண எம்.பி. கேள்வி

அரசு வடக்கில் மேற்கொண்டுவருவது மனிதாபிமான நடவடிக்கை என்று கூறுவது உண்மையானால் அங்கே 'மல்ரிபரல்'கள் உபயோகிக்கப்படுவது ஏன்? அப்பாவி மக்கள் கொல்லப்படுவது ஏன்?

- இவ்வாறு ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் செனவிரட்ண நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கேள்வி எழுப்பினார்.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பது தொடர்பான விவாதத்தை எதிர்க்கட்சியின் சார்பில் ஆரம்பித்து உரையாற்றியபோதே லக்ஷ்மன் செனவிரட்ண இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி இந்த யுத்தத்தை இவ்வருடம் டிசம்பர் மாதத்திற்குள் முடிவுக்குக் கொண்டுவருவோம் என்று கூறினார். அதனை அவரால் நடைமுறைப்படுத்த முடியுமா? யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் திட்டமும் நோக்கமும் அரசிடம் இல்லை.

அரச படையினருக்கு ஐக்கிய தேசியக் கட்சி அதியுயர் கௌரவத்தை அளிக்கின்றது. ஆனால், இன்றைய அரசு முப்படையினரையும் பகடைக்காய்களாக வைத்து அரசியல் இலாபம் தேட முனைகின்றது.

நமது கடற்படையினர் துல்லியமாகச் செயற்பட்டு எதிரிகளின் கப்பல்கள் மூன்றை அழித்து ஒழித்தனர். ஆனால், மஹிந்த ராஜபக்ஷ தாம் நேரடியாகச் சென்று கப்பல்களை மூழ்கடித்துவிட்டதுபோல் விழா எடுக்கின்றார். இது பாதுகாப்புப் படையினர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

இது மட்டுமா? இந்த அரசு இப்போது தனியார் ஊடகங்கள் மீது அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது. ஊடக சுதந்திரத்திற்கு ஆப்பு வைத்துவிட்டது.

ஐக்கிய தேசியக் கட்சி எந்தச் சமயத்திலும் நாட்டுப் பிரிவினையை அங்கீகரிக்கப் போவதில்லை. அதற்கு ஆதரவளிக்கப் போவதுமில்லை. ஆனால், நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டும். அனைத்து மக்களினதும் சுய உரிமை உத்தரவாதப்படுத்தப்படவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றது.

அரச படையினர் அராஜக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். சித்திரவதைகள் அதிகரித்துள்ளன. மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்படுகின்றன. இதில் புலிகளுக்கும் பங்குண்டு. அரச படைகளின் துணையுடன் துணைப் படைகள் கொலை, கொள்ளை, ஆள்கடத்தல் என்பவற்றில் ஈடுபடுகின்றனர். வரம்பு மீறிய மனித உரிமை மீறல் களைத் தடுக்க இலங்கை அரசு எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்று வெட்டவெளிச்சமாக குற்றம் சுமத்தியுள்ளார்.



ஆனால், நமது வாய்வீச்சு வீரர்கள் அமெரிக்காவையே காலடியில் வீழ்த்துவது போல் இங்கே வீரம் பேசுகின்றனர். இவர்களின் சமாதானமும் யுத்தமும் பேச்சில் மட்டுமே. யுத்தத்தை நிறுத்தவோ, சமாதானத்தை ஏற்படுத்தவோ அரசிடம் எந்தத் திட்டமும் இல்லை - என்றார் அவர். (சி)

# சமாதானத்தின் மீதிருந்த சிறு நம்பிக்கையையும் தவிடுபொடியாக்கியது தமிழ்ச்செல்வனின் கொலை!

### சபையில் சிறிகாந்தா எம்.பி. விசனம்



தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் அமரர் சு.ப.தமிழ்ச்செல்வனின் அகோரப் படுகொலை இந்த நாட்டின் எதிர்காலத்திற்கு ஒரு கேள்விக்குறியை ஏற்படுத்தியுள்ளது. சமாதான நடவடிக்கை மீது இருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையும் தவிடுபொடியாகிவிட்டது.

-இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் என்.சிறிகாந்தா நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார். தொடர்ந்து உரையாற்றும் போது அவர் தெரிவித்ததாவது-

தமிழ்த்தேசியத்தின் காந்தி என எல்லோராலும் மதித்து கௌரவிக்கப்பட்ட தந்தை செல்வநாயகத்தைப் போன்று தமிழ்ச்செல்வனையும் தமிழ் டிக்கள் கௌரவிக்கின்றனர். அனைத்து தமிழ் மக்களின் நம்பிக்கையையும் பெற்றவர் தமிழ்ச்செல்வன். தமிழ்ச்செல்வன் ஒரு போராளி மட்டுமல்ல, சிறந்த ஒரு அரசியல் மேதையாகவும் அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்பதில் ஆர்வம் உள்ளவராக இருந்தார்.

மனிதாபிமானமற்ற ஒரு தாக்குதலினால் தமிழ்ச்செல்வன் கொல்லப்பட்டார். தமிழ்ச்செல்வனின் மறைவுக்காக சர்வதேச சமூகமே அனுதாபம் தெரிவிக்கும் வேளையில் இங்குள்ளவர்கள் சந்தோஷம் கொண்டாடுகின்றனர்.

சிங்கள அரசின் வங்குரோத்து நிலையும் கரடுமுரடான வரட்டுக்கொள்கைகளும் தமிழர்களுக்கென தனிநாட்டை உருவாக்குவதற்கான அடித்தளத்தை அமைத்துக்கொடுத்துள்ளது.

தன் இனத்திற்காக தன் உயிர் நீத்த ஒரு தியாகி. அவர் இறந்தபின் அவமானப்படுத்துவது சிறிதும் மனிதாபிமானமற்ற செயலாகும். இவர்கள் [illegible] திருத்தவும் முடியாது.

தமிழ் மக்கள் தமக்கென ஒரு தனி நாட்டை உருவாக்குவதற்கு சிங்கள இனவாதிகள் உந்துசக்தியாக அமைந்துள்ளனர் - என்றார். (சி)




# என்னை நாட்டுப்பற்று அற்றவன் என்று சொன்னாலும் தமிழ்ச்செல்வன் மறைவுக்கு அனுதாபம் தெரிவிப்பேன்

### மு.கா. தலைவர் ஹக்கீம் முழக்கம்



"என்னை நாட்டுப் பற்றற்றவன் என்று முத்திரை குத்தினாலும், அதனை கருத்தில் கொள்ளாமல் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனின் மறைவுக்காக நான் அனுதாபம் தெரிவித்துக்கொள்கிறேன்."

-இவ்வாறு தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறினார்.

அவசர காலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பான விவாதத்திற்கு அரசின் தரப்பில் விவாதத்தை முடித்துப் பேசிய ரவூப் ஹக்கீம் இப்படிக் கூறினார்.

நான் அனுதாபம் தெரிவித்துப் பேசினால் பெரும்பான்மை இனத்தவர்கள் என்னை தேசப்பற்றற்றவன், தேசிய உணர்வு இல்லாதவன், துரோகி என்றெல்லாம் பேசுவார்கள். அதற்காக நான் கவலைப்படவில்லை. தமிழ்ச்செல்வனை நான் நன்கு அறிவேன். சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பித்த நாள் முதல் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. அவர் ஒரு நல்ல மனிதர். அவருடைய இயல்பு என்னைப் பெரிதும் கவர்ந்தது. அவருடைய மரணத்திற்காக நான் என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்விடயத்தில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் வர்க்க ரீதியாக ஒன்றுபட்டுவிட்டன - என்றார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1 வது பிறந்தநாள் வாழ்த்துக்கள்





திரு. திருமதி ராஜ்மோகன், நந்தினி, தம்பதியினரின்
செல்வப் புதல்வன்

### கிருஷன்

அவர்கள் தனது முதலாவது பிறந்ததினத்தை 08.11.2007 வியாழக்கிழமை 2.00 மணியளவில் தனது இல்லத்தில் வெகுவிமர்சையாக கொண்டாடுகின்றார். இவரை பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சித்தி, மாமா, மாமி, அப்பப்பா, தாத்தா, அண்ணன்மார், அக்கா, தங்கச்சி, மச்சான், மச்சாள்மார் மற்றும் உறவினர் அனைவரும் இவரை சீரும்சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

இராமநாதன் லேன்,
கோப்பாய் தெற்கு
கோப்பாய்.

தகவல்
தாத்தா தர்மலிங்கம்

## தீபாவளி நிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.8

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியினர் நடத்தும் தீபாவளி விசேட பிரார்த்தனை இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு சமிதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பஜனை, பூசை, தீப ஆராதனை என்பவை இடம் பெறும்.

(202)


## Aero Lanka

NEW WAY OF FLYING (PVT) Ltd.

### யாழ். கொழும்பு பயணிகள் சேவையும் பொதிகள் சேவையும்

- ★ யாழ். - கொழும்பு பயணிகள் சேவையினை நடத்தும் ஏரோலங்கா நிறுவனத்தினர் பயணிகள் சேவையுடன் பொதிகள் சேவையினையும் நடத்துகின்றனர்.
- ★ உங்களின் பொதிகள் விரைவில் கொழும்பினை அடைய வேண்டுமா...? அதற்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம் ஏரோலங்கா
- ★ குறைந்த செலவில் விரைவான சேவையைப் பெற்றுக்கொள்ள ஏரோலங்கா
- ★ வாடிக்கையாளரின் நலன்கருதி சாவகச்சேரியில் இயங்கிய கிளை அலுவலகம் மீண்டும் தமது சேவையினை ஆரம்பித்துள்ளது.
- ★ எனவே விரையுங்கள்...

தலைமை அலுவலகம்
இல.500, காலி வீதி,
கொழும்பு - 06
T.P.: 0112505633
0112505632
Fax: 0112500626

இல.249A, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021-222 6242
Fax: 021 -222 5600

இல.11, நவீன சந்தை
(மேல்மாடி), சாவகச்சேரி.
T.P.: 021-222 7979
Fax: 021 -222 7979

(இ/54278)



## இதோ!

இளமைத் துடிப்புமிக்க முழுமையான, திருப்திகரமான பாலியல் இன்பத்தைப் பெற்று, உங்கள் உடலில் ஜீவசக்தியைப் பெருகச் செய்து, பூரிக்கச் செய்வதற்கும், விரயமாகும் உங்கள் சக்தியை விரைவில் புனரமைப்பதற்கும், நரம்புத்தளர்ச்சி, மூட்டுவலி, கடுப்பு நோவு, ஆகியவற்றை நீக்கி உடலுக்கு உயிர்த் துடிப்பையும் வாலிபத்தின் வனப்பையும் பெறுவதற்கும் பாவியுங்கள்!
100% இளமையையும் வலிமையையும் தரும்.

### சித்தாரா முடக்கத்தான் அமுக்கரா சிரப்

யாழ். குடாநாட்டின் அனைத்துப் பார்மசிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அண்மையில்)

(சி/54292)



## இறைச்சிக்கோழி

புறொயிலர், கல்பேட்ஸ் இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்ததும் செய்யப்படாததும் தீபாவளியை முன்னிட்டு மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:
சிவகுமாரன் பாம்,
கல்வியங்காட்டுச் சந்தி, கல்வியங்காடு.

## இறைச்சிக்கோழி

புறொயிலர், கல்பேட், சேவல் என்பன விற்பனைக்குண்டு.

1. NEW R.S.K. FARM, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.
2. NEW R.S.K. FARM, K.K.S. றோட், சுன்னாகம், கொமர்ஷல் பாங் அருகில்.



## விமானப் பொதிகள் சேவை

உங்கள் பொருள்கள் யாழ்.- கொழும்பு அல்லது கொழும்பு - யாழ். தினசரி விமானம் மூலமாக உடனுக்குடன் உத்தரவாதத்துடன் அனுப்பி வைக்கப்படும். உங்களுக்குத் தேவையான பொருள்களைக் கொழும்பில் கொள்வனவு செய்து அனுப்பிவைப்பதற்கும் ஏற்பாடுகள் செய்து தரப்படும். அத்துடன் பூதவுடல்களும் ஏற்றுக்கொள்ளப்படும். தேவை ஏற்படின் விமானம் சாட்டற் (Charted) செய்து கொடுக்கப்படும்.

| | | |
|---|---|---|
| கொழும்பு - யாழ். 1Kg 250/= | SUB DEALERS தேவை | யாழ். - கொழும்பு 1Kg 200/= |

### EURO GROUP OF COMPANIES

35, STATION RD., MOUNT LAVINIA. TEL.0113846998, 0114542190, FAX: 0114542360.
WELLAWATTE BRANCH: 11, VIHARA LANE, COL-06.
TEL: 0114969116, 0773661891.
JAFFNA BRANCH: 22,WYMAN RD.
TEL: 0212223974, 0774207963 (C54198)


## நினைத்துப் பார்க்கிறோம்



### திருமதி மருதாம்பாள் பரமசாமி

புன்னகை பூத்த இனிய முகம்
சொன்னதைச் செய்யும் சொல் உறுதி
கருணை நிறைந்த கண் இரண்டு
அருகில் அணைக்கும் அன்புக்கரம்
இரங்கும் இதயம் படைத்தவரே!
எங்கள் அம்மா மருதாம்பாள்
விண்ணகம் எய்தி இன்றோடு
ஆண்டு இருபது ஆனதோ!

நம்ப எம்மால் முடியவில்லை
நித்தம் நினைந்து துடிக்கின்றோம்
ஆருயிர் அம்மா!
நீங்கள் வளர்த்த இளம் பருவம்
மெல்ல மறைந்து போகாமல்
தந்தை தயவுடனே தளராதிருக்கின்றோம்
தரணியில் நாங்கள் மீண்டிணையும்
தாகம் தணிக்க வாரீரோ!

'மருதாமனை'
இணுவில் தெற்கு. (67720)

அருமைப் புதல்விகள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் சக ஆசிரியர்
ஆ.பிரபானந்தன்
அவர்களின் பாசமிகு துணைவி
திருமதி பவானி பிரபானந்தன்

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேள்வியுற்று அதிர்ச்சியும் ஆழ்ந்த வேதனையும் அடைந்திருக்கும் நாம் இவ்வேளையில் அவரது பிரிவால் துயருற்றிருக்கும் எமது ஆசிரியருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைப் பகிர்ந்துகொள்வதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரிய ஊழியர் நலன்புரிக் கழகம்,
யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி,
வல்வெட்டித்துறை.
(சி/54294)

## கண்ணீர்க் காணிக்கை

எமது சங்கத்தின்
உபதலைவரும் சிலன் பேக்கரி
உரிமையாளருமாகிய
ந.தர்மசிலன்
அவர்களின் அன்புத் தாய்
திருமதி மகேஸ்வரி நடராசா
அவர்களின் பிரிவினால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும்
உறவினர்களுக்கும் எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகத்தினரும், அங்கத்தவர்களும்,
பணியாளர்களும்
யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்,
இல.183, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
(இ/54295)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 06 ★ 08 ★ 1942 | 20 ★ 10 ★ 2006 |

### அமரர் முருகேசு இராசரத்தினம்

திதி: சதுர்த்தசி 08.11.2007 (வியாழக்கிழமை)

அன்புடனும் பாசத்துடனும்
எங்களை வளர்த்த அப்பாவே!
எங்கள் வீட்டு ஒளி விளக்கே!
எங்கு சென்றீர் எம்மைவிட்டு
இனி என்று காண்போம்
உங்கள் திருமுகத்தை நீங்கள் மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் ஒருபோதும் எம்மை விட்டு நீங்காது!
ஆயிரம் உறவுகள் வந்தாலும்
அப்பா உங்களுக்கு நிகராகுமா?
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (67737)

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 7ஆம் ஆண்டின் நினைவில்



### அமரர் கந்தப்பு தவராசா (பவா)

வாழ்வுக்காக 08★01★1960

ஓய்வுக்காக 25★10★2000

திதி: 08-11-2007

உந்தன் நினைவுகளால் எந்த நாளும்
வெந்து நொந்து தவிக்கின்றோம் - நாம் ஆற
வந்து ஒருதரம் பார்க்காயோ அப்பா?
சந்தை சந்ததிகள் கூறும் உங்கள் நாமம்.
எந்த நாளும் ஓங்கி ஒலிக்குதே!
எந்தையே வந்தேவிடுங்கள் எம்மிடம்!

கரவெட்டி மத்தி,
கரவெட்டி. (67706)

நினைவுத்துயரில்:
மனைவி, பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

திருமதி
### ராசம்மா நடராசா

குப்பிளானைப் பிறப்பிடமாகவும் கொழும்பில் வசித்தவருமான ராசம்மா 05.11.2007 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகாபாலர் நடராசாவின் அன்பு மனைவியும் செல்வரத்தினம் (கனடா), பராசக்தி, பங்கதேவி (கனடா), நிர்மலாதேவி (கனடா), சுசிலாதேவி, யோகரத்தினம் ஆகியோரின் பாசமிகு தாயுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பலாலி வீதி,
ஊரெழு கிழக்கு. (67740)

தகவல்
சுசிலாதேவி
(மகள்).

## ஓராண்டு நினைவலைகள்



| தாயின் மடியில் | ஆண்டவன் அழைப்பில் |
|---|---|
| 05 ★ 09 ★ 1925 | 08 ★ 11 ★ 2006 |

### சூசைப்பிள்ளை அல்போன்சஸ்

(இளைப்பாறிய பாதுகாவலர், ரயில்வே திணைக்களம்)

அன்பால் எம் மனதில் நிலைத்திட்டீர்!
ஆண்டொன்று மறைந்தாலும் எம்மை விட்டகலவில்லை!
ஈகையின் சின்னமே! பண்பின் சிகரமே!
உற்றார், உறவினர் நின் புகழ் பாட!
விண் சேர்ந்து ஏன் எம்மை நெகிழ வைத்தீர்!
எம்மை விட இறைவன் உம்மை அதிகமாய் நேசித்தாரோ!
தன் பாதம் பணியும் வண்ணம் அவர்தான் பணித்தாரோ!
ஆண்டவனின் அருள் எம்மையும் ஆசீர்வதிக்கட்டும்!

C.S.அல்போன்சஸ்
(றோகான் - மகன்)
பொந்தி லேன்,
பண்டத்தரிப்பு. (67628)

எமது இல்லத் தலைவரின்
மறைவை நினைவு கூரும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளிச் சிறப்பு மலர் - 2007

## பிரார்த்தனை ஒன்றே சாந்தி தரும்



இன்று தீபாவளித் திருநாள். இது இந்துக்களின் முக்கிய பெருநாள்களில் ஒன்று. இன் றைய நாளில் புத்தாடை அணிந்து சுவாமி தரிசனஞ் செய்து இனிப்புப் பலகாரங்கள் உண்டு உறவினர் நண்பர்களுடன் சந்தோசம் கொண்டாடுவது வழமை.

துன்பத்திலும் துயரத்திலும் மூழ்கிக் கிடந்த மக்களை கிருஷ்ணபரமாத்மா துஷ்ட நிக்கிரக இஷ்ட பரிபாலனஞ் செய்யும் ரீதியில் நரகாசுரனை அழித்து ஒழித்துவிட்டு ஆதரவு காட்டியதாக இதிகாசம் கூறும்.

ஆகவே, இந்தத் தீபாவளியில் அனைத்து மக்களும் அல்லல் நீங்கி ஆண்டவன் அருளால் மகிழ்வுடன் இருக்க வேண்டும் என்று விரும் புகின்றோம்.

இன்று மக்கள்படும் இன்னல்கள், அவலங்கள், கஷ்டங்கள் சொல்லுந்தரமன்று. அவற்றிலிருந்து எப்போது மீள இயலும் நிம்மதியாக வாழ முடியும் என்ற ஏக்கமே எல்லோர் மனங்களிலும் பரவி உள்ளது.

இன்றைய ஏக்கத்தில் இருந்து விடுபடுவதற்கு- மன அமைதி பெறுவ தற்கு- பிரார்த்தனை பெரிதும் கைகொடுக்கும்.

எங்களுக்காக' என்று தனியாக அன்றி எல்லோருக்குமாக ஒவ்வொருவரும் செய்யும் பிரார்த்தனை கூட்டுமொத்தப் பயனைத் தரும். பிரார்த்த னையின் பலம் அசுரபலத்தையும் விடச் சக்தி வாய்ந்தது. அதுவே சாந்தி தரவல்லதாகும்.

தீபத் திருநாளில் நாம் ஒவ்வொருவரும் இதனை மனதில் இருத்தி நாளாந்தம் பிரார்த்தனையில் ஈடுபடுவோமாக.

எல்லாம் வல்ல நல்லைக் கந்தப் பெருமான் சூரபன்மனை அழித்துத் தேவர்களைக் காத்தருளியது போல் காக்க வேண்டுமென்று உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்குகின்றோம்.

தீபத்திலிருந்து ஒளி பிறப்பது போல் தமிழ்மக்களுக்கும் வெளிச்சம் வர வேண்டும் என வந்தித்துச் சிந்தித்துச் சேவித்து நிற்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,
இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்.

## மனித மனங்களில் சமாதானமே எங்கும் பரவட்டும்



இருளைப் போக்கி இல்லங்களில் மங்கலத்தை ஏற்படுத்துவதே தீபாவளிப் பண்டிகையின் நோக்கம். வானாகி ,மண்ணாகி ,வளியாகி 'ஒளியாகி' என்று பாடுகிறார் மாணிக்கவாசகர். ஒளி வடிவானவன் இறைவன், தீபமங்கள நமோநம என்கிறார் அருணகிரிநாதர். அஞ்ஞானம் என்ற இருட்டிலிருந்து ஞானம் என்னும் வெளிச்சத்திற்கு வருவதைத் தான் பெரியோர்கள் இப்படிப் பாடியுள்ளனர். அதர்மத்தை அழித்து தர்மத்தை நினைவு கூறும் நாளே தீபாவளி.

### மக்களைக் காக்க எடுத்த அவதாரம்

நரகாசுரனுடைய துர்குணத்தையும், தீய எண்ணத்தையும் அவன் செய்த இன்னலைப்போக்க வேண்டித்தான் கிருஷ்ண பரமாத்மா அவனை ஸம்ஹாரம் செய்தார். ஆக மக்களின் துயர் நீக்கும் திருநாளே தீபாவளி. மக்கள் யாவரும் நலமாக இருக்க வேண்டி எடுத்த அவதாரமே கிருஷ்ணாவதாரத்தில் தீபாவளிப் பண்டிகை மிக முக்கிய அங்கம் வகிக்கிறது. மனிதனுக்கு காமமும் குரோதமும் கூடாது. பேராசையும், துர்க்குணமும் கூடாது என்பதை இந்த தீபாவளி நரகாசுரவதத்தின் மூலம் உணர்த்துகிறது. பண்டிகையின் உற்சாகத்தில் மேற்கண்ட குணங்கள் இனிமேல் இருக்கக் கூடாது என்பதை வேண்டுதலாக பிரார்த்திக்க வேண்டும். இவ்வாறு பிரார்த்திப்பதே உண்மையான தீபாவளியின் நோக்கம்.

இந்தத் தீபாவளித் திருநாளில் பாழாய்ப்போன ஆசைகளையெல்லாம் பட்டாசாய் கொளுத்திடுவோம். போட்டி, பொறாமை, வஞ்சகம் இவற்றை தீயிலிட்டு எரித்திடுவோம். தீவிரவாதம் - இதை வெடியால் வெடித்திடுவோம். மனித மனங்களில் மங்களம் பிரகாசிக்கட்டும் எங்கும் 'சமாதானஒளி பரவட்டும்'.

சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர்,
பிரதமகுரு, வல்லை ஸ்ரீ முத்துமாரி அம்மன்
தேவஸ்தானம் , வல்வெட்டித்துறை.

## துன்ப இருள் நீங்குவதாக

தொன்மைச் சிறப்புமிக்க இந்து மதத்தின் முக்கியத்துவம் வாய்ந்த திருநாளாகிய தீபாவளி வாழ்வில் இருளை நீக்கி ஒளியைக் கொடுக்கும் வகையில் சிறப்புப் பெறுகின்றது. நாட்டின் இன்றைய கால கட்டத்தில் வரும் தீபாவளி நம்நாட்டு தமிழ் மக்களுக்கு எந்த வகையிலும் குதூகலத்தை வழங்கப்போவதில்லை. அவர்கள் அனுபவித்து வரும் துன்ப துயரங்களும் இன்னல்களும் இழப்புகளும் வார்த்தைகளால் சொல்ல முடியாதவை.

இத்தகைய துரதிர்ஷ்வசமான நிலையில் கேளிக்கைகள் விழாக்களுடன் தீபாவளித் திருநாளைக் கொண்டாடுவதும் பரஸ்பரம் வாழ்த்துக்களைப் பரிமாற்றி கொள்வதும் எவ்வகையிலும் பொருத்தமானதாகத் தெரியவில்லை.

இன்னல்களும் அவலங்களும் இடம் பெயர்வுகளுக்கும் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கம் நம்நாட்டு தமிழ் மக்களுக்கு- நமது உடன்பிறப்புகளுக்கு விமோசனமும் வாழ்வில் நிம்மதியும் மகிழ்ச்சியும் வேண்டி இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்ள வேண்டிய நாளாக தீபாவளித் தினத்தை அனுஷ்டிக்க வேண்டும்.

காலத்துக்குக் காலம் பல்வேறுபட்ட துயரங்களை அனுபவித்ததன் ஊடாக சொல்லொண்ணா வேதனையால் வாடும் எங்கள் தமிழ் மக்களது வாழ்வுடன் இணைந்திருக்கும் துன்ப இருளானது விரைவில் நீங்கி அவர்களுக்கு ஒளிமயமானதொரு எதிர்காலம் உதயமாகவேண்டும் என அகிலஇலங்கை இந்து மாமான்றம் பிரார்த்திக்கின்றது.

அகில இலங்கை இந்து மாமன்றம்.

## அனைவருக்கும் இனியவைசெய்வோமாக



பண்டிகைகளும் விழாக்களும் மக்கள் வாழ்வைப் புனிதப்படுத்துவன. ஒருவருக்கொருவர் உதவுதல், விருந்தினர்களை உபசரித்தல், புத்தாடைஉடுத்தல், குழந்தைகளை இனிப்புப் பண்டங்கள் கொடுத்து மகிழ வைத்தல், ஏழைகள் அனாதைகளுக்குக் கருணை காட்டுதல் ஆகியவை விழாக்களின் நோக்கமாகும். இதனால் என்றும் இன்பம் பெருகும் இயல்பு எமது உள்ளத்தில் ஏற்படும் . கொடுஞ் செயல்களைச் செய்து பலகாலம் மகிழ்ச்சியடைந்தவன் நரகாசுரன். இந்த நிலையில் கொடுமைகளை ஒழித்து நன்மைகளைச் செய்யவேண்டும் என்று அவனுடைய இறுதிக்காலத்தில் இறைவனால் உணர்த்தப்பட்டது. நல்வழிக்குத் திரும்பிய அவன் தான் மறையும் நாளை மக்கள் மகிழ்ச்சியாகக் கொண்டாட வேண்டும் என்று வரம் கேட்டான். அந்தத் தினமே தீபாவளியாக மலர்கிறது. இத்தினத்தைக் கொண்டாடுவதன் மூலம் அனைவருக்கும் இனியவை செய்து உய்தியடைவோமாக.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி.
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை

## அன்பும் அறனும் உண்மையும் வாழ்வில் ஆதாரங்களாக நிலைக்கட்டும்



இந்துக்களின் இனிய விழாக்களிலே தீபாவளித் திருநாள் முதன்மையானது. அறம் வெல்லும் என்ற அரியகருத்தினை இந்நாள் அனைவர்க்கும் போதிக்கின்றது. இருளில் இருந்து இவ்வுலகம் விடிவு பெற்ற நாளாக இந்நாளை எம்முன்னோர் கருதுவர்.

இந்நாளில் இறை வழிபாட்டுக்கு முதன்மை கொடுப்பது எமது பாரம்பரியமாகும். நாம் செய்த தவறுகளுக்காக இறைவனிடம் மற்றாடுவதனையும் இனிமேல் நாம் நேர்த்தியாக வாழ்வதற்கு இறையருளை வேண்டுவதனையும் வழிபாட்டின் முதன்மை அம்சமா கக் கொள்ள வேண்டும்.

எங்கள் மண்ணில் அனைவரும் அச்சமின்றி அவலமின்றி அனுதினமும் அகமகிழ்ந்த வாழும் வழி கிடைக்க வேண்டும் என அனைவரும் பிரார்த்திப்பது அவசியமாகும். எம் வாழ்வில் எமக்குக் கிடைத்த நன்மைகள் அனைத்துக்காகவும் இறைவனுக் கும் எம்மை ஆளாக்கியவர்களுக்கும் எமக்கு உதவியவர்களுக்கும் இந் நாளில் நன்றி சொல்வோம்.

ஏழ்மையால், நோயினால், பிரிவுகளினால் நொந்துபோய் இருப்பவர்களுக்கு கருணை உள்ளத்தோடு ஆறுதல் செய்ய முற்படுவோம். நல்லதையே நினைப்போம். இனிமேல் நடப்பவையாவும் நல்லவனாக நடந்தேற வேண்டுமென்று இறைவனைத் துதிப்போம்.

அன்பு, பண்பு, கருணை, அறம், உண்மை என்ற வார்த்தைகள் எம் வாழ்வின் ஆதாரங்களாக நிலைக்கட்டும். மனம் தளராது அனைவரும் மகிழ்வோடு வாழ இந்நாளை வரவேற்றுக் கொள்ளுங்கள். இடர் நீங்கி அனைவரும் இன்புற்று வாழ இனிய வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் கூறி இறைவனை இறைஞ்சுகிறேன்.

செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன்.

## இந்துமத குருமார் ஒன்றியத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

சர்வசித்து வருடம் நிரம்பிய இத்தீபாவளி நன்நாளுடன் அனைத்து மக்களும் எதிர்பார்க்கும் சாந்தி, சமாதானம் மலரவும், மக்கள் படும் துன்பங்கள், கஷ்டங்கள் நீங்கி அனைவரும் நிம்மதியான வாழ்வு வாழவும் எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அனைத்து அன்புள்ளங்களுக்கும் தீபாவளி வாழ்த்துக்களும் ஆசிகளும் கிடைப்பதாகுக!

"லோகா சமஸ்த்தா சுகினோ பவந்து"
"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

- ப.மனோகரக் குருக்கள்

## மலர்க தீபாவளியே!

எத்தனை பண்டிகை வந்திடினும்
ஏக்கங்கள் தீருமோ மகிழ்ந்திருக்க
இத்தரை காணும் அவலங்கள்
எத்தனை கலம் எதிரொலிக்கும்
சித்தப் பிரமையில் பித்தராகி
எந்தப் பிடிப்புமிலா ஏக்கத்திலே
நித்தமும் வாடிடும் எம்மவர்கள்
நிம்மதி கண்டிட மலர்க தீபாவளியே!

அல்வாயூர் சி.சிவநேசன்

## தீர்விளைத்தா தீபாவளியே!

தேசத்தின் இருளகற்று தீபாவளியே
தேடுகின்ற உரிமையைத்தா தீபாவளியே
நாசத்தை ஒழித்துவிடு தீபாவளியே
நமக்கொரு விடிவைத்தா தீபாவளியே
மோகத்தைக் கொன்றுவிடு தீபாவளியே
மோதலை நிறுத்திவிடு தீபாவளியே
ஆபத்தை போக்கிவிடு தீபாவளியே
அடிமையை நீக்கிவிடு தீபாவளியே
தீபத்தை ஏற்றிவிடு தீபாவளியே
தீர்வினைத் தந்துவிடு தீபாவளியே
பாவத்தை தீர்த்துவிடு தீபாவளியே
பாதையைக் காட்டிவிடு தீபாவளியே
சோதனை ஒழித்துவிடு தீபாவளியே
சுதந்திரம் தந்துவிடு தீபாவளியே
சாதனை செய்துவிடு தீபாவளியே
சாந்தத்தைத் தந்துவிடு தீபாவளியே

காரை எம்.பி. அருளானந்தன்.


# மோட்டார் சைக்கிள் பாவனையாளர்களுக்கு ஓர் நன்மை

தீப ஒளி வீசிடும் தீபாவளி நன்நாளில் வாடிக்கையாளருக்கு வாழ்த்துக்களைக் கூறுகின்றோம்

Valvoline MOTOR OILS

★ 4000 Km வரை பாவிக்கக் கூடியது.
★ TVS, Bajah, LML மோட்டார் கம்பனிகளின் அங்கீகாரம் பெற்றது.
★ இஞ்சினுக்கு சிறந்த பாவனையைக் கொடுக்கிறது.
மற்றும் Valvoline Forkoil விற்பனைக்கு உள்ளது.
எரிபொருள் நிரப்பு நிலையங்கள் முகவர்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

TVS ஜப்பான், சைனா 49CC மோட்டார் சைக்கிள்கள் மற்றும் பற்றரிகள், அசிட்கான்கள், ஹெல்மட் வகைகள், உதிரிப்பாகங்கள் என்பன மொத்தமாகவும் சில்ல றையாகவும் பெற்றுக் கொள்ள நாடுங்கள்.

TVS



TVS Company யின் அங்கீகாரம் பெற்ற விற்பனை முகவர்.

ஏக விநியோகஸ்தர்கள்: யசோ மோட்டோர்ஸ் 163, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளிச் சிறப்பு மலர் - 2007

## நிம்மதியான வாழ்வுக்காக எல்லோரும் பிரார்த்திப்போம்

விண்ணுலக தேவர்களையும் மண்ணுலக மாந்தர்களையும் கொடுமைப்படுத்தி கொடுங்கோல் ஆட்சி புரிந்தான் நரகாசுரன். துஷ்டர்களை அழித்து தர்மத்தை நிலைநாட்டும் பொருட்டு காத்தற் தெய்வமாகிய ஸ்ரீ கிருஷ்ண பகவான் அசுரனை அழித்தார். அவன் இறக்கும் போது தனது தவற்றை உணர்ந்தான். தான் இறந்த தினத்தை அனைவரும் மகிழ்வுடன் கொண்டாட வேண்டும் என்று பகவானை வேண்டிக் கொண்டான். பகவானும் அவ்வாறே ஆகட்டும் என கூறி தவறை உணர்ந்த அசுரனுக்கு நற்கதி அளித்தார். இந்த நாளையேநாம் தீபாவளிப் பண்டிகையாக கொண்டாடுகின்றோம்.

இந்து சமயத்தவரின் இப்பண்டிகை தற்போது இன, மத வேறுபாடின்றி பலராலும் விரும்பி கொண்டாடப்படும் சிறப்பினைப் பெற்றுள்ளது. நாள் முழுவதும் ஓய்வின்றி உழைக்கும் மக்களுக்கு இவ்வாறான பண்டிகை நாள்கள் மனமகிழ்ச்சியையும் புத்துணர்ச்சியையும் ஊட்டுகின்றன. ஏழை, பணக்காரர் என்ற வேறுபாடின்றி அனைவரும் புத்தாடை அணிந்து பலவகை பட்சணங்களையும் பகிர்ந்து பேதங்களை மறந்து தீபாவளியை வரவேற்கின்றனர்.

தற்போதுள்ள நாட்டின் சூழ்நிலை, விலைவாசி உயர்வு, தொழிலின்மை, நிம்மதியற்ற பதற்றமான வாழ்க்கை இவை காரணமாக இலங்கையில் வாழும் தமிழர்கள் எவருமே மனநிறைவோடும் மகிழ்ச்சியோடும் தீபாவளியை கொண்டாடுவார்களா என்றால் இல்லை என்றே சொல்ல வேண்டும். வருடந்தோறும் பண்டிகைகளும் விழாக்களும் வந்து செல்கின்றன. நமது வாழ்க்கை கேள்விக்குறியான நிலையில் உள்ளது. இந்தத் திருநாள்களில் நாம் செய்யக்கூடியது எமக்கு மேல் உள்ள இறைசக்தியை வழிபட்டு எமது எதிர்கால சந்ததிகளாவது மனநிறைவோடு இப் பண்டிகைகளைக் கொண்டாடி நிம்மதியான வாழ்வு வாழ அருள வேண்டும் என்று பிரார்த்திப்பதைத் தவிர வேறு வழியில்லை. எனவே எல்லோரும் ஒன்றுபட்டு ஒருமனதாக இறைவனை வழிபட்டு நிம்மதியான வாழ்வு கிட்டப் பிரார்த்திப்போமாக.

ஸ்ரீவத்ஸ வ.இராஜேஸ்வரக் குருக்கள்,
ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்,
வண்ணை- யாழ்ப்பாணம்.

## அசுர குணங்கள் அழிந்து மனதில் நல்ல குணங்கள் மலரும் நாள்

*இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகளில் தீபாவளி முக்கியமானது. சைவர்களும் வைஷ்ண வர்களும் சிறப்பாகக் கொண்டாடுவர். 'துலாம் மாச மகாத்மியம்' என்னும் நூல் தீபாவளி ஐப்பசி மாதத்து தேய்பிறைச்சதுர்த்தசியில் கொண்டாடப்பட வேண்டுமெனக் கூறுகிறது. இந்த மாதத்தில் சூரியன் துலாம் ராசியில் வசித்து வருவது சிறப்பாகும்.*

*தீபங்களை வரிசையாக ஏற்றி வழிபடுவது தீபா வளி எனப்படும். இந்நாளில் மனிதனுடைய அகத்திலுள்ள அசுர குணங்கள் அழிந்து, மனித குணங்கள் மலரும். இதனால் வீட்டிலும் நாட்டிலும் இன்பம் மலரும். இதனையே நரகாசுரன் கதையும் விளக்குகிறது. நரகாசுரன் என்பதில் 'நரன்', 'அசுரன்' என இரு சொற்கள் உண்டு. நரன் என்பது மனிதத் தன்மை பொருந்தியது. அசுரன் என்பது தீய குணங்கள் பொருந்தியது. திருமாலால் நரகாசுரன் அழிக்கப்பட்டு அருளப்பட்டான் என்பது, அவனது உள்ளத்திலிருந்த அசுரகுணங்கள் அழிந்து மனித குணங்களைத் திருமால் மலரச் செய்தார் என்பதாகும். இத்திருநாளே இந்துக்களால் தீபாவளியாகக் கொண்டாடப் பட்டுவருகிறது.*

*நாமும் எம்மினத்தவரிடையே காணப்படும் அராஜகங்கள், அடக்குமுறைகள், அநீதிகள், தலைக்கனங்கள் அனைத்தும் அடியோடு அழிந்துபோக வேண்டும் எனவும், மனிதகுணங்கள் மலர வேண்டும் எனவும் இத்தீபாவளித்திருநாளில் பிரார்த்திப்போம்.*

என்.பி.ஸ்ரீந்திரன்.

இன்பத் திருநாளாம் தீபாவளி நன்நாளில்
அனைவருக்கும் எங்கள் நல்வாழ்த்துக்கள்...


The Finance Co Ltd TFC ESTD-1940 YOUR SUCCESS IS OUR GOAL


உங்கள் முன்னேற்றத்தில் நிதித் தேவைகளின் பங்காளியாக
31 வருடங்களாக யாழ். மண்ணில் சேவையாற்றி வரும் நாம்

★ நிலையான வைப்புகளிற்கு அதியுயர் வட்டி வீதம்
★ உயர் வட்டியுடன் சாதாரண மற்றும் சிறுவர் சேமிப்புக் கணக்குகள்
★ வாகனம், வீடு, காணி கொள்வனவுகளுக்கான இலகுமுறை கடன் வசதிகள்
★ வீடு கட்டுதலுக்கான கடன் வசதிகள்
★ வெளிநாட்டு உயர் கல்விக்கான கடன் வசதி
★ பண வைப்புக்களுக்கான விரைவான கடன் வசதிகள்

இவற்றுடன் மேலும் பல சேவைகளை வழங்கும்
ஒரே ஒரு தனியார் நிதி நிறுவனம்.

உங்கள் வெற்றியே எங்கள் இலக்கு!
த பினான்ஸ் கம்பனி பி.எல்.சி
173, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
www.thefinance.lk

தொ.பே.இல.: 021 - 222 6256 Fax: 021-222 2310

இல.36, பிரதான வீதி,
நெல்லியடி.
தொ.பே.இல. 021 226 4170

இல.19, கச்சாய் வீதி,
சாவகச்சேரி.
தொ.பே.இல. 021 222 2035



பற்களில் பழுதுண்டா? விழுந்து விட்டனவா? முன்பை விட உறுதியான அழகான வெண் சங்குப் பற்களைக் கட்டிட இளைய தலைமுறைகளே மிதப்புப் பற்களா? அழகிய அமைப்பை பெற்று உறுதிமிக்க பற்கிளிப்புக்களை பொருத்திட
யாழ்ப்பாணத்தில் கைதேர்ந்த ஒரே ஸ்தாபனம் மூக்குக் கண்ணாடி
அகமும், பல்கட் டும் 564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.2486.
கிளைகள்
பழைய பொலிஸ் நிலையம் முன்பாக இல.80, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.
இல.91, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில்.

### தீபம் ஒளிரட்டும்

தீபம் ஒளிரட்டும்
தீயகுணம் ஒழியட்டும்
தாபம் தணியட்டும்
தார்மிகம் ஓங்கட்டும்
நீதி நிலைக்கட்டும்
நெருக்குதல் நீங்கட்டும்
போதி மரத்தேவன்
போற்றும் தருமங்கள்
நாட்டில் நிலைத்தோங்கும்
நாளும் பிறக்கட்டும்

- தருமன்.


எமது அன்பர்கள், நண்பர்கள்,
ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
இனிய
தீபாவளி நல்
வாழ்த்துக்கள்!
நவநாககரிகமான
ஆடைத்தெரிவுகளுக்கு
நம்பிக்கையோடு
நாடுங்கள்:

லைடன்
புடைவை நிலையம்
இல.410, ஆஸ்பத்திரி வீதி, (பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.
தொ.பே.: 222 238



எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தீபாவளித் திருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்

உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணி நேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும் மற்றும் உள்ளூர், வெளியூர் தொலைத் தொடர்பு வசதிகள், லெமனேற்றிங், பிறின்ரிங், கிறபிக்ஸ் டிசைனிங், கணனி உதிரிப்பாகங்கள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்ந்து மூன்று தினங்களுக்கு எமது நிறுவனத்தின் அனைத்து சேவைகள் மற்றும் விற்பனைகள் எங்குமே காணாத விலைக்கழிவுகளுடன்




WESTERN UNION

லண்டனுக்கு அனுப்பப்படும் 5 கி.கி. பொதிகளுக்கு மிகக்குறைந்த கட்டணம்

FedEx Express
நீங்கள் குறிப்பிடும் எந்த முகவரியிலும் ஒப்படைக்கப்படும்



யாழ். குடாநாட்டிலிருந்து உலகின் எந்தப் பாகத்திற்கும் கடிதங்கள் மற்றும் பொதிகளை மிக விரைவாக அனுப்பிட

சகல விதமான கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் கணனிகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.


திருமுருகன் கொம் நெற்

259. கே.கே.எஸ். வீதி. யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 7835
(ஆஸ்திலோன் டிஸ்ரிபியூட்டஸ் முன்பாக)

46.ஆடியபாதம் வீதி. திருநெல்வேலி.
தொ.பே. 021 222 7310
(நல்லூர் ப.நோ.கூ. சங்கம் முன்பாக)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளிச் சிறப்பு மலர் - 2007




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளிச் சிறப்பு மலர் - 2007

## அக, புற இருளைப் போக்கி ஒளிதரும் தீபாவளி!

ஆண்டு தோறும் எவ்வித தராதர பாகுபாடுமின்றிக் கொண்டாடப்படும் பண்டிகை தீபாவளி என்று கூறினால் அது மிகையாகாது. இந்தப் பண்டிகை மிகவும் பழமை வாய்ந்த தொரு பண்டிகையாகும்.

தீபாவளி ஐப்பசி மாதத்தில் அமாவாசையை ஒட்டிய தினத்தில் வந்து புற இருள் போக்கி அக இருளையும் நீக்குகிறது.

மனிதன் நரகனாக இல்லாமல் தூய மனிதனாக உயரவேண்டுமானால் காமகுரோத மதமாச்சரியங்களை விடுத்து, நற்பண்புகளை வளர்த்து நல்ல செயல்கள் செய்வதோடு நல்ல விடயங்களில் ஈடுபட வேண்டும் என்ற தத்துவத்தை இந்தத் தீபாவளித் திருநாள் உணர்த்துகிறது.

அசுர குணங்களில் உருவான நரகாசுரனை ஸ்ரீகிருஷ்ண பகவான் சத்யபாமா தேவியுடன் சம்காரம்செய்தநாளேதீபாவளித்திருநாள் ஆகும்.

நரகாசுரனுடன் நடைபெற்ற யுத்தத்தில் ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா தேர்த்தட்டில் சோர்ந்து விழுந்தபோது சத்யபாமாவாகிய பூமாதேவியானவர் வீரத்துடன் வில்லேந்தி நரகனை வதைத்ததால் தீபாவளித் திருநாள் வீரலஷ்மியை வழிபடும் திருநாளாகவும் போற்றப் படுகின்றது.

ஸ்ரீராமர் அயோத்திக்குத் திரும்பி வந்து பட்டாபிஷேகம் செய்து கொண்ட நாளே தீபாவளித் திருநாளாகக் கொண்டாடப்படுவதாகச் சில நூல்கள் கூறுகின்றன.

பகவான் மகாபலிச்சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண் கேட்டு இரண்டு அடிகளால் மண்ணுலகினையும் விண்ணுலகினையும் அளந்து மூன்றாவது அடிக்காக, சக்கரவர்த்தியின் தலைமேல் தன் காலடியை வைத்து ஆசீர்வதித்துப் பாதாள உலகினையும் ஆளவைத்தார். மகாபலி ஆண்டுக்கு ஒரு முறை பூமிக்கு வரும்போதுதனக்குஅருள்புரியும் படியும், உலக மக்கள் அனைவரும் அந்த நாளை மகிழ்ச்சிகரமான நன்னாளாகக் கொண்டாட வேண்டும் என்றும் பணிந்து வேண்டினான். மகாபலிக்குத் திருமால் கேட்ட வரம் அருளியபடியே அந்தநாள் தீபாவளி ஆயிற்று என சில நூல்கள் கூறுகின்றன.

சதுர்த்தசி நாளானது சிவராத்திரி எனப்படும் சிவனுக்குரிய விசேட தினமாகும். தனக்கு உகந்த நாளாகிய சதுர்த்தசி நாளில் தான் சிவபெருமான் கங்காதேவியான கங்கையை பூமிக்கு அனுப்பி வைத்தார். இந்தக் கங்கைக்கும் சிவனுக்கும் நன்றி செலுத்தும் நாளாகவும் தீபாவளித்திருநாள் அமைந்துள்ளது.

தீபாவளிஎன்பதுதீபங்கள்வரிசையாகஅடுக்கி வைப்பது மாத்திரமல்ல, அஞ்ஞான இருளில் இருந்து விலகும் தன்மைக்கும் தீபாவளி என்பது பொருத்தமாகிறது.

அறியாமை, விட்டுக்கொடுக்கின்ற மனப்பான்மை இல்லாமை, பெருந்தன்மை இல்லாமை, கல்விஇல்லாமை இப்படியான தன்மைகளை அகற்றும் நாளாகக் கொள்ளத் தக்கதே தீபாவளித் திருநாளாகும்.

வசதிபடைத்தவர்கள் அன்றைய தினம் ஏழை, எளியவர்களுக்கு இனிப்புப் பண்டங்களையும், புத்தாடைகளையும்வழங்கி அவர்களை மகிழ்விக்கும் வகையில் கொண்டாடப்படும் நாளே தீபாவளித்திருநாளாகும்.

திருமால் பத்து அவதாரங்களை எடுத்துப் பக்தர்களைக் காப்பாற்றினார். கிருஷ்ணவதாரத்தில்தான் பல நூற்றுக்கணக்கான கொடிய அசுரர்களையும் அசுரத்தன்மை வாய்ந்தவர்களையும் கொன்றொழித்தார்.

வராகாவதாரம் எடுத்தபோது அவரது உஷ்ணத்தை உலகோரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. பூமாதேவியானவர் வராக நாராயணனைச் சேர்ந்து அந்த வெப்பத்தைத் தணிய வைத்தார். அப்போது தோன்றியவன்தான் நரகன் என்னும் பெயருடைய அரக்கன். மனித வடிவில் அசுரகுணம் கொண்டவன் நரகாசுரன். அசுரர்கள் பிறந்த உடனேயே வளர்ந்து விடுவார்கள்.

இதையுணர்ந்த திருமால் அப்போதே அவனை அழித்துவிடத் தீர்மானித்தார். ஆனால், பூமாதேவியானவர் திருமாலைத் தடுத்து இவனை ''இப்போது கொல்ல வேண்டாம், இவன் பூலோக மாந்தர்களுக்கு தீமை செய்ய முயன்றால் நானே இவனைக் கொன்றுவிடுகிறேன்'' என்று கூறி வைத்தார்.

துவாபரயுகம் தொடங்கிய வேளையிலேயே ஸ்ரீகிருஷ்ணாவதாரமும் நடந்தது. நரகாசுரனின் தொல்லைகள் நாளுக்குநாள் அதிகரித்து வந்தன. தேவர்களும் மானுடர்களும் சொல்லொணாத் துயரடைந்து கிருஷ்ண பரமாத்மாவிடம் சென்று முறையிட்டனர்.

கிருஷ்ண பரமாத்மா பூமாதேவியையும் உடன் அழைத்துக் கொண்டு கருடன் மீதேறிப் புறப்பட்டு நரகாசுரனைப் போருக்கழைத்தார். அப்போரில் நரகாசுரனின் படைகளை அழித்தொழித்த மாயவனால் நரகாசுரனைக் கொல்ல முடியவில்லை. இதனை அவதானித்த சத்யபாமாவாகிய பூமாதேவியானவர், தானே வில்லேந்தி ஒரே ஒரு பாணத்தால் நரகாசுரனின் தலையைச் சீவிக் கொன்றார்.

உயிர்பிரியும் வேளையில் நரகாசுரனுக்கு நல்லறிவு உண்டாகியது. தன்னைக் கொல்ல வந்தவர்கள் திருமாலும், தனது தாயாருமாகிய பூமாதேவியும்தான் என்பதனை நரகாசுரன் உணர்ந்து, தான் உலகோர்க்கும் தேவர்களுக்கும் செய்த கொடுமைகளை நினைந்து வருந்தினான்.

அவனது உயிரானது ஒரு ஒளிவடிமாகத் தோன்றிப் பகவானையும் தேவியையும் மூன்றுமுறை வலம் வந்து ஆகாய மார்க்கமாக மேலெழுந்து சென்று மறைந்தது.

ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவை நரகாசுரனின் மகனான பகதத்தன் என்பவன் வந்து பணிந்து நின்றான். ''தந்தையின் தவறுகளை மன்னித்து அவரது ஆவியை ஆசீர்வதிக்கும்படி'' வேண்டிக் கொண்டான்.

பகவானும் பகதத்தன் கோரியவாறே ஆசீர்வதித்து, இன்றுமுதல் இந்நாளை பூலோக மாந்தர் அனைவரும் தீபாவளித் திருநாளாகக் கொண்டாடுவார்களாக என்று அருள் புரிந்து, பூமாதேவியுடன் துவாரகைக்கு மீண்டார்.

நரகாசுரனது உயிர்பிரியும் வேளையில் ஒளி வடிவமாக அவனது ஆவி பகவானைச்சுற்றி மேலெழுந்து சென்றமையால் இத்தினத்திற்கு தீபங்கள் ஏற்றி இறைவனை வழிபடுவது வழக்கமாகியது.

மனிதன் மனிதனாக வாழவேண்டும், மனிதாபிமான உணர்வுதான் சமயம். இந்த உணர்வுதான் பண்பாடுமாகும். எல்லோரும் வாழவேண்டும் எல்லோரும் நல்ல வாழ்வுடன் வளமுடன் இருக்கவேண்டும் என்று இந்தத் தீபாவளித் திருநாளில் வாழ்த்தி பகவானை வணங்கிப் பணிவோம். *

பிரம்மஸ்ரீ ச.கு.சுதர்சனக் குரு,
பிரதம குரு,
ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்.

## புனித நாள்களைக் கொண்டாடுவதால் என்ன பயன்?

இந்நாள்களில் நமது இதயம் புனிதமடைகிறதா? இல்லையே. உலகியல் முறைகளில்தான் இந்த நாள்களைக் கொண்டாடுகின்றோம். இறைவனை நினைவுகொள்ளத்தான் இந்த புனிதநாள்கள் ஏற்பட்டனவே தவிர, பாயாச பரமானங்களைச் சுவைப்பதற்காக அல்ல. புனிதநாள்களை நாம் விருந்து உண்பதிலும், பொழுதுபோக்குவதிலும்தான் செலவழிக்கின்றோம். புனிதநாள்களின் இரகசியத்தைப் புரிந்து கொள்ள நாம் முயற்சி செய்யவேண்டும்.



விழா நாள்களிலும் சரி, மங்கள நாள்களிலும் சரி, என்ன நடந்தாலும் மனித இதயத்தில் மட்டும் சிறிதும் மாற்றம் ஏற்படுவதில்லை. வெளியில் மனிதன் காணப்படும் விதத்துக்கும் தனக்கு உள்ளிருக்கும் ஆத்மாவுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை அறிவதில்லை. மனிதனுக்கும் சமூகத்துக்கும் இடையே உள்ள உறவு நமக்குப் புலப்படுவதில்லை. அது நெருக்கமானது. அத்தகைய புனித உறவை மறந்து நாம் அதனால் அவ்வுறவை இழக்கின்றோம். அந்தர்முக பாவத்தை உணர முயற்சி செய்யும்போது ஏகத்துவ பாவனையை நாம் உணர்கின்றோம். இவ்வாறு செய்யாது புனித நாள்களையும் விழாக்களையும் கொண்டாடினால் அவை உலகியல் தொடர்பு கொண்டவையாக மட்டுமே இருக்கும்.

**சாயி சிந்தனை**

தேசத்தின் முதல்தர வங்கியான இலங்கை வங்கி அதன் வருடாந்த அறிக்கைக்கான உலகின் கௌரவமிக்க விருதினை வென்றெடுத்துள்ளது.

BOC
ලංකා බැංකුව இலங்கை வங்கி

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு
இலங்கை வங்கியின்தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

- இலங்கைவங்கி அதன் 2006 ஆம் ஆண்டு அறிக்கைக்கான உலகின் கௌரவமிக்க விருதுகளில்நான்கினை வென்றெடுத்துள்ளது.
- ''வருடாந்த அறிக்கைக்கான அக்கடமி விருதுகள்'' தொடர்பில் 2006 ஆம் வருடத்திற்கான வருடாந்த சர்வதேச விருதுகள் போட்டியில் 26 நாடுகளிலிருந்து கலந்துகொண்ட 1900 நிறுவனங்களுடன் இலங்கை வங்கியும் போட்டியிட்டது.
- இதில் ' வங்கிகள்-தேசிய வர்த்தகம்' என்பதன் கீழ் மரபுவழியல்லாத வருடாந்த அறிக்கைப்பிரிவில் மிக உயர்ந்த **தங்க விருதை** இலங்கை வங்கி தட்டிக்கொண்டது.
- இதன் முழுவிவரம் www.mercommawards.com இல் பெற்றுக்கொள்ளலாம்.
- 2006 LACP வருடாந்த சர்வதேச தரிசனம் (VISION ) விருதுகளில் இலங்கைவங்கி 21 நாடுகளிலிருந்து வந்த 2, 500 நிறுவனங்களுடன் போட்டியில் கலந்து கொண்டது.
- இதில் வருடம் 1 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் உள்ள வர்த்தக- வங்கிகள் பிரிவில் மிக உயர்ந்த **பிளாட்டினம் (Platinum )** விருதை வென்றெடுத்துள்ளது.
- சகல பிரிவுகளுக்குமான போட்டியில் இலங்கைவங்கி நிதித்துறையில் சிறந்த அறிக்கைக்கான வெண்கல விருதினை வென்றது.
- மற்றும் 2006 ஆம் ஆண்டுக்கான சிறந்த 100 அறிக்கைகள் போட்டியில் 37 ஆவது இடத்தைப்பெற்றது.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு இலங்கை வங்கியின் கிளைகள் யாவும் இன்று காலை 8.30 மணி முதல் 12.00 மணிவரை வாடிக்கையாளர் சேவைகளுக்காகத் திறந்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் தீபாவளிச் சிறப்பு மலர் - 2007










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

08.11.2007



திருமதி

## பார்வதிப்பிள்ளை இரத்தினசபாபதி

(பூபதி)

யாழ்ப்பாணம் சந்தை கிழக்கு ஒழுங்கை,
மானிப்பாயைச் சேர்ந்த எமது குடும்பத் தலைவி
திருமதி இ.பார்வதிப்பிள்ளை அவர்கள்
சிவபதமடைந்து ஓராண்டு பூர்த்தியானதையிட்டு
நினைவுகூரும் அன்னாரது ஆத்மசாந்திப்
பிரார்த்தனை இன்று (08.11.2007) இந்தியாவில்
நடைபெறும் என்பதை
தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்: இ.குருபரன் (மகன்)
இந்தியா.
Phone.: 24734012
Mobile: 9841345565 (சி/54275)

அன்னாரின் குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## திருநாவுக்கரசு பாலச்சந்திரன்

வண்ணார்பண்ணை வடமேற்கைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டை வடக்கை வசிப்பிடமாகவும் தற்பொழுது ஜேர்மனியில் வசித்து வந்தவருமான திருநாவுக்கரசு பாலச்சந்திரன் (4.11.2007) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் கோமளம்பாள் தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும் அனித்தாவின் அன்புத் தந்தையும் நாகச்சந்திரன், சுரேந்திரசந்திரன் (உரிமையாளர், சுவிற்லான்ஸ் தேநீர்சாலை, ஆனைக்கோட்டைச் சந்தி), கிருஸ்ணறஞ்சினி, புஸ்பறஞ்சினி (ஜேர்மனி), காலஞ்சென்ற திருஞானறஞ்சினி மற்றும் திருஞானச் சந்திரன் (ஜேர்மனி), தில்லைறஞ்சினி (ஆசிரியை, இளைய தம்பி மகாவித்தியாலயம், வண்ணார்பண்ணை), தில்லையற் கரசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவபாக்கியம், நந்தகுமார் (இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்), மங்களேஸ்வரி, கனகசுந்தரம் (ஜேர்மனி), அனுலா (ஜேர்மனி), கணேசமூர்த்தி (ஆசிரியர், தொழில் நுட்பக் கல்லூரி, வவுனியா), ஜெயந்தி (ஜேர்மனி), புவனராணி (ஓய்வுபெற்ற ஆசிரியை, R.C.T.M), செங்கமலாசன், கேதீஸ்வரன் (ஜேர்மனி), மோகனாங்கி (ஜேர்மனி), தவறாஜேஸ்பரன் (பிரான்ஸ்), கிருபாகரன் (தபாலகம்- ஆனைக்கோட்டை), நளாயினி (ஆசிரியை ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்), மாலினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் காசிபதி துரைசிங்கம், யோகநாதன், பரமநாதன், ஸ்ரீதரன், சரசலாதேவி ஆகியோரின் பாசமிகு சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (08.11.2007) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும் என்பதையும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
தி.நாகச்சந்திரன் (சகோதரன்),
சு.கிருபாகரன் (மைத்துனர்).

ஆலடி,
ஆனைக்கோட்டை. (67730)


**COMPUTER CLASSES - R.Kumaran B.Sc.**

- ICT Grade 10/11-Internet-Hardware-Ms-Office
- Linux - PHP- MySQL-V.B.Net-ASP.Net-Oracle
- SQL server-VB6-Java-HTML -BIT- CBF/DBF

பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு. T.P.:0776577359



**இறைச்சிக்கோழி விற்பனை**

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்
நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (67707)



**கோழி இறைச்சி விற்பனை**

தீபாவளியை முன்னிட்டு நிறைகூடிய புறொயிலர், ஊர்ச்சேவல்கள் என்பனவேண்டிய நிறைகளில் மிக மலிவான விலையில் கண்ணெதிரே சுத்தம் செய்து உடனடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு: மல்ரி பாம் சென்ரர்,
61, இராமநாதன் வீதி, கலட்டி.
கிளை: சுவாமியார் வீதி, அந்தோனியார் கோயிலடி, கொழும்புத்துறை.



**வேலையாள் தேவை**

மில் வேலையில் அனுபவமுள்ளவர் உடன் தேவை. நேரில் வரவும்.
சரவணபவான் அரைக்கும் ஆலை,
பழைய பூங்கா வீதி,
கொய்யாத்தோட்டச் சந்தி,
யாழ்ப்பாணம். (67724)


## பருத்தித்துறைப் பங்கில் அருட்பணிச் சபை

பருத்தித்துறை,நவ.8

பருத்தித்துறைப் பங்கில் அருட்பணிச் சபை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. பருத்தித்துறைப் பங்கைச் சேர்ந்த ஒவ்வொரு தேவாலய சபைகளிலிருந்தும் பிரதிநிதிகள் இந்த அருட்பணிச் சபைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.சபையின் தலைவராகப் பருத்தித்துறைப் பங்குத் தந்தை செயற்படுவார்.

அருட்பணிச் சபை உறுப்பினர்களுக்கு கத்தோலிக்க நிறுவனங்கள் கொண்டிருக்கும் கொள்கைகள், இறையியல் சார்பான விளக்கங்களும் ஆய்வு மன்றங்கள் மூலம் நடத்தப்பட்டு வருகின்றன.

அண்மையில் சுண்டுக்குளி கிளரேசியன் தியாகிகள் இல்லக்குரு அருட்திரு. ரவிச்சந்திரன் அடிகளார் தலைமையில் ஆய்வு மன்றமொன்று நடத்தப்பட்டுள்ளது.(202-218)

## வீதி சேதம்

சுழிபுரம்,நவ.8

மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலைக்கு கிழக்குப் பக்கமாகவுள்ள வீதி திருத்தம் செய்யப்படாமையால் மழை காலத்தில் பொது மக்கள் போக்குவரத்துச் செய்யமுடியாமல் அவதியுறுகின்றனர். வீதியின் இரு பக்கங்களிலும் பெரிய குழிகள் உள்ளன. மழைநீர் வீதியிலுள்ள கிடங்கில் நிறைந்திருப்பதால் வாகனங்கள் செல்லும்போது வீதியால் செல்பவர்கள் வெள்ளத்தால் நனைய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
(203-28)

# மானிப்பாய் இந்துக் கல்லூரி

## தரம் 6 அனுமதி - 2008


மானிப்பாய் இந்துக் கல்லூரியில் 2008இல் தரம் 6 அனுமதிக்கான விண்ணப்பப் படிவங்களைக் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 15.11.2007

அதிபர்.

(சி/54285)

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில்
29 * 10 * 1927

விண்ணில்
25 * 09 * 2007

## அமரர் சின்னையா இராஜசிங்கம் (S.R)

(சிவசக்தி ஸ்ரோர்)

எங்கள் அன்புத் தெய்வத்தின் பிரிவுச்செய்தியறிந்து எமக்கு அனுதாபமும் ஆறுதல்மொழி கூறியும் அவர்தம் இறுதி நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் கலந்து எமக்கு உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

40/1, புதுவீதி,
கோய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர். (67733)

## வலிகாமம் வடக்குப் பிரதேச சபை, காங்கேசன்துறை (மல்லாகம்)

சந்தைகள், இறைச்சிக்கடைகள், சந்தைக் கடைத்தொகுதிகள் என்பன
01.01.2008 தொடக்கம் 31.12.2008 வரை குத்தகைக்கு/ வாடகைக்கு விடுவதற்கான

# கேள்வி அறிவித்தல் -2008

கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித்திகதி : 14.11.2007 புதன்கிழமை நண்பகல் 12 மணிவரை

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி: 19.11.2007 திங்கட்கிழமை நண்பகல் 12 மணிவரை

கேள்விகள் திறக்கப்படும் திகதி: 19.11.2007 திங்கட்கிழமை பிற்பகல் 2 மணி

| குத்தகை விவரம் | மாத வாடகை | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் பத்திரப்பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| மல்லாகம் உப அலுவலகம் | | | | |
| 01. அளவெட்டி மலைவேம்படிச் சந்தை | - | 40000.00 | 1000.00 | 150.00 |
| 02. மல்லாகம் பொதுச்சந்தை | - | 10500.00 | 500.00 | 150.00 |
| 03. இறால்மடம் சந்தை | - | 550.00 | 250.00 | 150.00 |
| 04. மல்லாகம் மாட்டிறைச்சிக் கடை | 300.00 | 69000.00 | 1000.00 | 500.00 |
| 05. மல்லாகம் ஆட்டிறைச்சிக்கடை | 300.00 | 11500.00 | 500.00 | 150.00 |
| 06. கும்பலை மாட்டிறைச்சிக்கடை | 150.00 | 40000.00 | 1000.00 | 500.00 |
| 07. மல்லாகம் சந்தை கருவாட்டுக் கடை | 300.00 | 525.00 | 250.00 | 150.00 |
| 08. அளவெட்டி மலைவேம்படி கருவாட்டுக் கடை இல.06 | 125.00 | 1000.00 | 500.00 | 150.00 |
| 09. அளவெட்டி மலைவேம்படி கருவாட்டுக் கடை இல.07 | 125.00 | 1000.00 | 500.00 | 150.00 |
| தெல்லிப்பழை உப அலுவலகம் | | | | |
| 01. கூத்தன்சீமாச் சந்தை | - | 1200.00 | 500.00 | 150.00 |
| 02. கடைத்தொகுதி கடை இல.01 | 150.00 | 1000.00 | 500.00 | 150.00 |
| 03. கடைத்தொகுதி கடை இல.02 | 150.00 | 1000.00 | 500.00 | 150.00 |

குறிப்பு:

* மாத வாடகைகள் யாவும் விலை மதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டின் பிரகாரம் அறவிடப்படும்.
* கேள்விப்பத்திரப் பணம், கேள்வித்தொகை, மாத வாடகை ஆகியவற்றுக்குப் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (Vat) 15%உம் மேலதிகமாகச் செலுத்தப்படவேண்டும்.
* கேள்விப்பத்திரம் கோருபவர்கள் ஆள் அடையாள அட்டையுடன் அதன் போட்டோப் பிரதியையும் கொண்டுவருதல் வேண்டும்.
* இறைச்சிக்கடை விண்ணப்பம் பெறுபவர்கள் முன்பு கடை நடத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லையென்பதை உறுதிப்படுத்திய கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.
* போதிய காரணங்களால் கேள்வியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
* கேள்விப்படிவம் பூரணப்படுத்தப்பட்டு அரக்கு முத்திரையிட்ட கடித உறையில் குறித்த தினத்திற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபாலிலோ அல்லது தலைமை அலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியிலோ சேர்ப்பதுடன், கேள்விப்படிவத்தின் ஒரு பிரதியை *"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்"* அவர்களுக்கு அனுப்புதல்வேண்டும்.
* ஏனைய மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்திலும் மல்லாகம், தெல்லிப்பழை உப அலுவலகங்களிலும் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

வலிகாமம் வடக்குப் பிரதேச சபை,
காங்கேசன்துறை (மல்லாகம்).
2007.11.07 (சி/54287)

திருமதி ஸ்ரீரஞ்சிநாலர் மாணிக்கம்,
செயலாளர்,
வலிகாமம் வடக்குப் பிரதேச சபை.


# COMPUTER EXPRESS

INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

#15, Sirambiyadi Lane, Jaffna *Branch* : #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 021 222 8250 , 0777 222422

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2007 80% off

அனைவருக்கும் புலமைப்பரிசில்

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science 4 Months ~~8,250/=~~ 1,650/= | Honours Diploma in Computer Science 5 Months ~~10,500/=~~ 2,100/= | Diploma in Web page Designing 4 Months ~~8,250/=~~ 1,650/= |
| Diploma in Graphic Desining 4 Months ~~8,250/=~~ 1,650/= | Diploma in Desktop Publishing 4 Months ~~7,250/=~~ 1,450/= | Diploma in Hardware Engineering 3 Months ~~7,250/=~~ 1,450/= |
| Diploma in Auto CAD 3 Months ~~7,250/=~~ 1,450/= | Diploma in Microsoft Office 3 Months 1,000/= | Accounting Package 3 Months ~~8,250/=~~ 1,650/= |

50% Off ADVANCE COURSES

Diploma in Multimedia ~~5500~~ 2750
Diploma in Video Editing ~~6500~~ 3250

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ். வரையறுக்கப்படாத கணனிப்பயிற்சி.

வகுப்புக்கள் ஆரம்பம் :
Batch I :09/11/2007 2 PM
Batch II :10/11/2007 9 AM
Batch III :11/11/2007 9 AM
Batch IV :[illegible]

November 15ம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்துகொள்ளவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பேரினவாத நரகாசுரன் அழியும் தீபாவளித் திருநாள் எந்நாளோ?

இன்று தீபத் திருநாள். தீபாவளி நன்னாள்.

ஒளியைப் பிரவகிக்கும் தீபங்களைப் போற்றி ஏற்றுகின்ற நாள்.

இயற்கையோடு இயைந்து வாழ்ந்தவர்கள் இந்துக்கள். ஒளியின் மூலத்தை அவர்கள் உணர்ந்தவர்கள். அதனால் அதனைத் தெய்வமாகத் தொழுது போற்றுகின்றனர் அருட்பெரும்சோதியாக - சுடர் ஒளியாக - தெய்வீகத்தின் தனிப்பெரும் கருணையை அவர்கள் கண்டார்கள்.

இயற்கையின் மூலமும், முதலும் கதிரவன். அவனே சக்தியின் தோற்றுவாய். பூமிப்பந்துக்கு சக்தியைப் பதிப்பவனும் அவனே. அவனால்தான் உயிர்கள் உயிர்ப்புப் பெற்றன. அவை பிறக்கின்றன; விழிக்கின்றன; வாழ்கின்றன; பிழைக்கின்றன; சிறக்கின்றன. எல்லாம் அவனால்தான். அவனின்றி அணுவும் அசையாது.

ஆக, இயற்கையின் இயக்க காரணன் உதயனே. இந்த ஆதவனின் சக்தியை ஒளி வடிவத்திலும் வெப்ப வடிவத்திலும் பூவுலகு பெற்றுக்கொள்கிறது.

சூரியசக்தி தாவரங்கள் ஊடாக உலகில் பதிக்கப்படுகிறது. அதற்கு ஒளியே ஊடகம். கதிரவன் கனலும் சக்தியைக் காவிவந்து நமக்குத் தருவது ஒளியே.

அவ்வாறு சக்தி வடிவில் மூலமாய் நிற்கும் ஒளியைப் போற்றுகின்ற திருநாள் இன்று. ஒளியைக் காலும் தீபங்களை வரிசையாக அடுக்கிக் கொண்டாடுவதே தீபத் திருநாள்.

'தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும். தர்மம் ஒருநாள் வெல்லும்.' - இந்த உயரிய - அழியா - நீதியை உணர்த்துவதே தீபத் திருநாளின் உட்கிடையாகப் புதைந்து கிடக்கும் அற்புத அர்த்தம்.

நரகாசுரன் என்ற கொடுங்கோலனின் ஆட்சியில் பூலோகத்தவரும் மேலோகத்தவரும் அல்லலுற, தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வியது. அச்சமயம் மகாவிஷ்ணு இந்த அவலம் போக்க கிருஷ்ணாவதாரம் எடுத்து நரகாசுரனைத் தமது சக்கராயுதத்தால் வதம் செய்து, உலகுக்குத் தர்ம வாழ்வை மீட்டுக்கொடுத்தார் என்பது தீபாவளித் திருநாளின் பின்னணியில் புதைந்து கிடக்கும் ஐதீகக் கதை.

தீபாவளியைத் தொடர்ந்து வருகின்ற கந்தசஷ்டியிலும் கூட சூரபத்மனை வதம் செய்யும் கந்தவேள் கடவுளின் சூரசம்ஹாரமும் இதே தத்துவத்தையே பிரதிபலித்து நிற்கின்றது.

ஈழத் தமிழர்களும் இன்று தமது தர்ம வாழ்வை சூது கவ்வியதால் அல்லற் பட்டு, அல்லாடி நிற்கின்றார்கள். தர்மம் ஒருநாள் வென்று தங்களுக்கு நியாயம் கிட்டும் என்ற நம்பிக்கையோடு வாழ்க்கைப் போராட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றார்கள் அவர்கள்.

பேரினவாத நரகாசுரன் ஈழத்தமிழினத்தைப் பற்றிப் பிடித்து, அடக்கி, ஒடுக்கி, அடிமைப்படுத்தி, துன்பசாகரம் என்ற நிரந்தரச் சிறையில் தள்ளி விட்டிருக்கின்றான்.

அதிலிருந்து மீட்சி என்ற விடுதலையைப் பெற்றுத் தருவதற்காக நவீன கிருஷ்ண பரமாத்மா எப்போது சங்கெடுத்து ஊதி, சன்னதம் கொண்டு மோதி, சரித்திரம் படைப்பார் - சாதிப்பார் - என்று நாள்களை எண்ணிக் காத்திருக்கின்றனர் தமிழ் மக்கள்.

ஈழத் தமிழினத்தைப் போர் மேகங்கள் கவிந்து நிற்கின்றன. அமைதி முயற்சி என்ற தற்காலிக ஒளிக்கீற்று மின்னலெனத் தோன்றி மறைந்து விட்டது. அதனால் இருள் சூழ்ந்து அடிமை வாழ்வில் சிக்கித் தவிக்கிறது தமிழினம். சுதந்திரம் என்ற பெரும் ஜோதி தோன்றி தமது வாழ்வில் ஒளியேற்றும் நாளை எதிர்நோக்கிப் பார்த்திருக்கின்றது தமிழினம்.

அடிப்படை உரிமைகளை இழந்து, நீதியும், சமத்துவமும் கொண்ட கௌரவ வாழ்வைத் தொலைத்து, சுயாதிபத்தித்தைப் பறிகொடுத்து, தாயகத் தனித்துவத்தை ஆக்கிரமிப்புக்குப் பலிகொடுத்து, வாழ்வியலுக்கும் இருப்பியலுக்குமான விழுமியங்கள் விலை பேசப்பட்ட சூழலில் அவ(ல) நிலையில் சிக்கி நிற்கின்ற ஈழத் தமிழர்கள் தீபத் திருநாளை மகிழ்வோடு கொண்டாடும் நிலையில் இல்லை. மறத்தை அறம் வெல்லும் என்ற எதிர்பார்ப்போடு - நம்பிக்கையோடு - தீபாவளியை வெறுமனே அனுஷ்டிக்கும் நிலைமைதான் அவர்களின் மனங்களில் இன்று. பேரிருளிலும், போரிருளிலும் சிக்கித் தவிக்கும் தமக்கு சமாதான சூரியன் எழுந்து சுதந்திரச் சுடர் பிரகாசிக்கும் நாளே கொண்டாடத் தகுந்தது என்பது அவர்கள் கணிப்பு.

அந்நிய ஆக்கிரமிப்பில், நரகாசுரப்பிடியில் சிக்கி நிற்கும் ஈழத் தமிழர்களை மேலும் அடக்கி, ஒடுக்குவோம் எனக் கங்கணம் கட்டி, சூளுரைத்து, ஆணவத் திமிருடன் சவால் விட்டு நிற்கும் பேரினவாத அரக்கன் முழுதாகச் சம்ஹாரம் செய்யப்படும்போதுதான் அமைதிக்காற்று வீச, சுதந்திச் சுடர் பிரகாசிக்க, அமைதி தேவன் ஆட்கொள்வான். அதுவரை போரியல் பிசாசுகள் முழங்கிக்கொண்டே இருக்கும். இது தவிர்க்க முடியாத நிர்ப்பந்தம். நிதர்சனம்.

பதினான்கு ஆண்டுகள் இருளில் மூழ்கிக் கிடந்த அயோத்தி மாநகருக்கு இராமபிரான், சீதாபிராட்டி சகிதமாக மீண்டு, அரியணையில் அமர்ந்து, ஒளியேற்றிய திருநாளும் இந்தத் தீபாவளித் தினம்தான் என்று கூறுவர்.

தம்மொழி, தம் இனம், தம் தாயகம், தம் சுயநிர்ணயம் என்ற அடிப்படைகளில் ஆழப் பதிந்து நிற்கும் தமிழினத்தின் நியாயமான அபிலாஷைகள் அரியணை ஏறும் நாளே ஈழத் தமிழர்களுக்குத் தீபாவளி கொண்டாடத் தகும் நாள்.

அந்தத் திருநாளுக்காகவே வழிமேல் விழி வைத்துத் தவமியற்றிக் காத்திருக்கிறது தமிழினம்.

# டீசல் ம.எண்ணெய் விலைகள் இனி அதிகரிப்பில்லை
## புதிய வரவு செலவுத் திட்டத்தில் நேற்று அறிவிப்பு

* சகல விதமான மதுபான வரிகளும் போத்தல் ஒன்றுக்கு தலா 35 ரூபா வீதம் அதிகரிப்பு.
* அனைத்து ரக சிகரெட்டுகளின் விலை இரண்டு ரூபாவால் உயர்வு.

வற்வரி குறைப்பு

* 2008 ஜனவரி முதல் பெற்றோல் மீதான 'வற்' வரி 15 வீதத்திலிருந்து 5 வீதமாக குறைக்கப்படும்.
* டீசல், மண்ணெண்ணெய் விலைகள் அதிகரிக்கப்படமாட்டா.
* வருமானம் குறைந்த மற்றும் சமுர்த்தி உதவிகளைப் பெறும் குடும்பங்களுக்கு 100 ரூபாவுக்கான மண்ணெண்ணெய் மானியம்.
* ஓட்டோக்களுக்கு கழிவு விலையில் குறிப்பிட்ட அளவு பெற்றோல் மானிய அடிப்படையில் வழங்கப்படும்.

15,000 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு

* 15,000 பட்டதாரிகளுக்கு தொழில் வாய்ப்புகள்.
* ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில்களைப் பெறுவோரின் எண்ணிக்கை 10 ஆயிரத்திலிருந்து 15 ஆயிரமாக அதிகரிக்கப்படும்.
* தோட்டத் தொழிலாளர்களுக்கு அரிசி, கோதுமை மா, மண்ணெண்ணெய் சலுகை விலையில் வழங்கப்படும்.

இதற்கென 20 கோடி ரூபா ஒதுக்கீடு.

* பாலின் விலை ஒரு லீற்றருக்கு 30 ரூபா முதல் 40 ரூபா வரை அதிகரிக்கப்படும்.
* வெளிநாடுகளில் இருந்து பெறும் வெளிநாட்டு வருவாய், சம்பளம், பங்குலாபம் என்பன இலங்கையிலுள்ள வங்கிகளின் ஊடாக வரும்போது அதற்கு வருமான வரி விலக்கப்படும்.

அரச ஊழியர்களுக்கு வாழ்க்கைச் செலவுப் படி அதிகரிப்பு

* அரச ஊழியர்களின் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளது. 2008 ஜனவரி முதல் 2,500 ரூபாவாகவும் 2008 ஜூலை முதல் 2,875 ரூபாவாகவும் அது அதிகரித்து வழங்கப்படும்.
* கறவைப் பசுக்களை இறைச்சிக்காக வெட்டுவதற்கான தண்டப் பணம் 250 ரூபாவிலிருந்து 50,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
* உள்ளூரில் உற்பத்தி செய்யும் அரிசி மற்றும் சீனி உற்பத்திக்கான பெறுமதி சேர் வரி நீக்கப்பட்டுள்ளது.
* உள்ளூரில் திரைப்படம் மற்றும் நாடகங்களை தயாரிப்பதற்கான உபகரணங்களுக்கு இறக்குமதி வரிச் சலுகை அளிக்கப்படும்.
* நாட்டைக் காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஆயுதப் படையினருக்கும் அவர்களின் குடும்பத்தவர்களுக்கும் இபலோகம என்ற இடத்தில் முதற்கட்டமாக 1, 500 வீடுகள் கட்டி கொடுக்கப்படும்.

# யாழ்.வலயப் பாடசாலைகளின் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,நவ.8

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30மணிமுதல் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

ஆட்டங்களின் விவரம் வருமாறு-

16 வயதுப் பிரிவு

* கோப்பாய் ம.வி. எதிர் சென். பற்றிக்ஸ் கல்லூரி.
* அத்தியார் இந்துக் கல்லூரி எதிர் கொக்குவில் இந்துக் கல்லூரி.
* யாழ்.மத்திய கல்லூரி எதிர் யாழ். முத்துத்தம்பி ம.வி.
* யாழ்.இந்துக் கல்லூரி எதிர் புனித சாள்ஸ் ம.வி.

14 வயதுப் பிரிவு

* கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் புனித சாள்ஸ் ம.வி.
* நாவாந்துறை றோ.க.வி. எதிர் அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்.
* யாழ்.இந்துக் கல்லூரி எதிர் யாழ். மத்திய கல்லூரி.
* ஊரெழு கணேசா எதிர் கோண்டாவில் பரஞ்சோதிவித்தியாலயம்.(1)

# இலங்கை வங்கியும் மக்கள் வங்கியும் இன்று திறந்திருக்கும்

யாழ்ப்பாணம்,நவ.8

தீபாவளியை ஒட்டி இன்று வங்கிகளுக்கு விடுமுறையாக அறிவிக்கப்பட்ட போதும் மக்கள்வங்கி, இலங்கை வங்கி ஆகியன மட்டுப்படுத்தப்பட்ட நேரத்தில் திறந்திருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் வங்கிக் கிளைகள் காலை 9மணிமுதல் நண்பகல் 12மணி வரையும் -

இலங்கை வங்கிக் கிளைகள் காலை 8.30மணிதொடக்கம் நண்பகல் 12 மணிவரையும் திறந்திருக்குமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசியசேமிப்புவங்கி ,கொமர்ஷல் வங்கி, செலான் வங்கி ஆகியன இன்று இயங்காதென தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## நாளை

| | |
|---|---|
| ஐப்பசி - 23 | வெள்ளிக்கிழமை 09.11.2007 |
| திதி : அமாவாசை | பிற்பகல்: 04.38 |
| நட்சத்திரம் : | சுவாதி முன்னிரவு : 10.45 |
| சுபநேரம் | : 06.05 - 07.35 |
| ராகுகாலம் | : 10.35 - 12.05 |

அமாவாசை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலோலி குடும்பஸ்தர் ஆணைக் குழுவில் சரண்

யாழ்ப்பாணம்,நவ.8

உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து குடும்பஸ்தர் ஒருவர் மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் சரணடைந்துள்ளார்.

புலோலியைச் சேர்ந்த 26 வயதான இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சரணடைந்துள்ளார்.

இவரைப் பாதுகாப்பாகத் தங்க வைப்பதற்கான ஏற்பாடுகளை மனித உரிமை ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது. (1-50)

# உங்கள் எதிர்பார்ப்புகள் ஈடேறட்டும்; படைத் தளபதி தீபாவளிச் செய்தி

யாழ்ப்பாணம்,நவ.8

குடாநாட்டில் தீபாவளியைக் கொண்டாடும் உங்கள் அனைவரது எதிர்பார்ப்புக்களும் பிரார்த்தனைகளும் ஈடேறவேண்டும் என நாமும் வேண்டுகிறோம்.

யாழ். பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திசிறி விடுத்த தீபாவளிச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது வாழ்த்துச் செய்தி வருமாறு-

உலக வாழ் இந்துக்களுக்கு இந்நாள் சமய ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் மிகவும் முக்கியமாக நாள் என்பதை நான் அறிவேன். தமது வாழ்வு வளம்பெறவேண்டியும் தேவர்களையும் மனிதர்களையும் துன்புறுத்தி வந்த நரகாசுரனை கண்ணபிரான் அழித்து விடுதலை அளித்த நாளையே தீபாவளியாகக் கொண்டாடுகின்றோம்.

அவ்வாறு அன்று நரகாசுரன் மக்களை வதைத்தது போல் தற்போது எல்.ரி.ரியினர் இந்துக்களையும் முழு இலங்கை வாழ் மக்களையும் வேதனைக்குட்படுத்தி வருகின்றனர். தற்போதைக்கும் இவர்களைக் கட்டுப்படுத்தி அரசாங்க நிர்வாகத்துக்குள் கொண்டுவரப்பட்டிருக்கும் வடக்கு - கிழக்கு பிரதேச மக்களுக்கு தீபாவளியை மகிழ்வுடனும் சுமுகமாகவும் கொண்டாடத் தேவையான சூழலை பாதுகாப்புப் படையினர் அமைத்துக் கொடுத்துள்ளனர்.

அதேபோன்று எதிர்காலத்தில் இலங்கை வாழ் அனைத்து இந்துக்களுக்கும் மிகவும் மகிழ்வுடன் தமது உறவுகளோடு இத்தீபாவளியைக் கொண்டாடக் கூடியவாறு சமாதானத்தை ஏற்படுத்துவதே பாதுகாப்புப் படையினரின் எதிர்பார்ப்பாக இருப்பதுடன் அதனை கூடிய விரைவில் நிறைவேற்றுவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்போமென்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று யாழ். குடாநாட்டில் தீபாவளியைக் கொண்டாடும் உங்கள் அனைவரது எதிர்பார்ப்புக்களுக்கும் பிரார்த்தனைகளும் ஈடேற வேண்டுமென்று நாமும் வேண்டுவதுடன் உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சிகரமாக இனிய தீபாவளியாகட்டும் என்று வாழ்த்துகின்றேன். - என்றுள்ளது.

## எழு சூரியனே சமாதான விடுதலைக்கு!

*எழு சூரியனே எரித்திடு நாசங்களை - இங்கே*
*அழு கண்ணீர் துடைத்திட வாவா!*
*பழுதில்லா வாழ்வளித்திட வாராயோ - வரம்*
*தழும்பில்லா சமாதான விடுதலை.*

- அல்வையூர் மனோகரன்

## அந்த நாள் தீபாவளி ஞாபகம்!

பட்டப் பட பட... சீன வெடி
வட்டப் பெட்டிச் சீனவெடி
'மான் மார்க்கு', 'புறா மார்க்கு', 'ஆனை மார்க்கு'
சப்பைப் பெட்டிச் சீனவெடி
ராத்திரிக்கு வெள்ளி உதிரும் பூந்திரி
வானம் போகும் வாணம்
தீபாவளிக்கு தினுசு வெடிகள்
முதன் நாளே களை கட்டும் தீபாவளி!
யாழ். தேவியில் தேவி அக்கா
மட்டக்களப்பில் இருந்து குட்டி மாமா
எட்டு நாளுக்கு முன் இங்கு;
ராணி தியேட்டரில் 'ஹவுஸ்புல்'
தீபாவளிக்கு புதிய திரைப்படம்
திண்டாட்டம் இல்லாத கொண்டாட்டம்
தின்பண்டங்கள் ஏராளம்
அந்த நாள் தீபாவளி ஞாபகம் வரும்
அதுவே நமக்குத் தீபாவளி.

- நல்லூர் கா.கார்த்திகேசு.

# புலிகளின் பயங்கரவாதத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் வரவு - செலவுத்திட்ட உரையைப் பகிஷ்கரிக்கும் வகையில் சபைக்கு சமுகமளிக்கவில்லை.

### புலிகள் அரசியல் தீர்வுக்கு வரத் தயாரில்லை

இந்நிலையில் தனது வரவு - செலவுத் திட்ட உரையை நிகழ்த்திய ஜனாதிபதி அதில் கூறிய முக்கிய அம்சங்கள் வருமாறு:-

புலிகள் தமது ஆயுதங்களைக் கைவிடவோ அல்லது ஜனநாயக அரசியல் தீர்வுகளுக்கு வரவோ தயாராக இல்லை. பயங்கரவாதப் பிடியில் சிக்கியிருக்கும் மக்களை விடுவித்து அவர்களின் அடிப்படை உரிமைகளைப் பேணும் அரசியல் தீர்வு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமானால் புலிகளின் பயங்கரவாதத்தை பூண்டோடு அழிப்பதைத் தவிர வேறு வழி இல்லை.

அண்மைக்காலங்களில் நாம் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளின் பயனாக புலிகளிடமிருந்து பெருமளவிலான ஆயுதங்கள், சுடுபடைக்கலங்கள், வெடிபொருள்கள் என்பனவற்றைக் கைப்பற்றி உள்ளோம்.

படை வலிமையும் கொடூரப் பயங்கரவாத நடவடிக்கையும் காணப்பட்ட போதும் யுத்த நிறுத்த ஒப்பந்த காலத்தில் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பல பிரதேசங்களை நாம் கைப்பற்றியுள்ளோம். கிழக்கு மாகாணத்தை முற்றும் முழுதுமாக அரச கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளோம்.

அநுராதபுரம் வான்படைத் தளத்தின் மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலின் பின் நமது படையினர் நடத்திய விவேகமான தாக்குதல்களினாலும் நடவடிக்கைகளினாலும் புலிகள் தமது முகாம்களுக்குள் முடங்கி உள்ளனர்.

என்றாலும் கூட அவர்கள் தமது பயங்கரவாதச் செயல்களை நிறுத்தவோ அரசியல் தீர்வு ஒன்றைக் காணவோ தயாராக இல்லை. எனவே அவர்களை முற்றாக அழித்து ஒழிப்பதைத் தவிர வேறு வழி இல்லை. - அதுவே ஒரே வழி.

புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகள் கடந்த 25 வருடங்களாக நாட்டின் பொருளாதாரம், அபிவிருத்தி என்பனவற்றில் பெருமளவில் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன. என்றாலும் கூட நமது திறமையான நடவடிக்கைகளினால் கடந்த வருடம் அபிவிருத்தி வளர்ச்சி ஏழு வீதமாக உயர்ந்துள்ளது. இது ஒரு சாதனை.

### பாதுகாப்பு செலவின அதிகரிப்பை விமர்சிக்க முடியாது

நாட்டினதும் பொதுமக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது அரசின் கடமை. இதனால் எமது முப்படைகளினதும் பலத்தை ஸ்திரப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் கடந்த வருடம் ஆறாயிரத்து முந்நூறு கோடி ரூபாவாக இருந்த பாதுகாப்பு செலவினங்கள் இம்முறை 11 ஆயிரத்து 700 கோடி ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளன. இதனை எவரும் தவறாக விமர்சிக்க முடியாது.

2002 - 2004 காலப்பகுதியில் பாதுகாப்புச் செலவைக் குறைத்து சமாதான சூழலை ஏற்படுத்தினோம் எனச் சிலர் பெருமை அடித்துக் கொண்டாலும் நாட்டில் எந்த ஒரு பகுதியிலும் சிறு அபிவிருத்தியைக் கூட அவர்கள் ஏற்படுத்தவில்லை என்பதே உண்மை.

இவ்வளவு நெருக்கடியான நிலையிலும் கூட 'கமநெகும', 'ஜாதிக சவிய' ஆகிய திட்டங்களின் மூலம் சிறு பயிர்செய்கையாளர்களுக்கும் சமுர்த்தி உதவிகளைப் பெறுவோருக்கும் பல நன்மைகளை ஏற்படுத்தியுள்ளோம்.

நெல் மற்றும் ஏனைய உற்பத்திப் பொருள்களுக்கு நியாயமான விலைகளை வழங்கியுள்ளோம்.

உலக சந்தையில் எரிபொருள், கோதுமை மா, பால்மா என்பனவற்றின் விலை பெருமளவு அதிகரித்துள்ளது. இதனால் இறக்குமதி செலவினங்களும் அதிகரித்துள்ளன.

பாவனையாளர்களின் நலன் கருதி அரிசி, உருளைக்கிழங்கு, வெங்காயம் போன்ற அத்தியாவசியப் பொருள்களுக்கு வரிச் சலுகை அளித்துள்ளோம்.

ஆழிப்பேரலை மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளினால் சுற்றுலாத்துறை, மீன்பிடித் தொழில் போன்றவை பாதிக்கப்பட்டபோதிலும் தேயிலை, இறப்பர், கறுவா, நெல், வெங்காயம், உருளைக்கிழங்கு, சோளம் மற்றும் பாற்பண்ணை உற்பத்திப் பொருள்கள் நல்ல நிலைகளைப் பெற்றுள்ளன.

ஆடை உற்பத்தித்துறை மற்றும் இரத்தினகல் ஆபரண ஏற்றுமதித்துறைகளுக்கு வழங்கிய ஊக்குவிப்புகளினால் இத்துறைகளில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி காணப்பட்டுள்ளது.

போக்குவரத்து வசதிகளை அபிவிருத்தி செய்யும் வகையில் 2,200 புதிய பஸ்களையும் பெரும் எண்ணிக்கையிலான ரயில் பெட்டிகளையும் இறக்குமதி செய்துள்ளோம்.

துறைமுகம் மற்றும் உள்நாட்டுச் சர்வதேச வர்த்தகம் ஏழுவீதம் வளர்ச்சியடைந்துள்ளது.

### வெளிநாட்டு முதலீடு அதிகரிப்பு

இரண்டு வருடங்களுக்கு முன் ரூ. 250 மில்லியன் டொலராக இருந்த வெளிநாட்டு முதலீடுகள் இப்பொழுது ரூ. 650 மில்லியன் டொலராக அதிகரித்துள்ளது. இது எமது அரசின் மீது ஏற்பட்ட நம்பிக்கையின் விளைவுதான் - என்றும் ஜனாதிபதி கூறினார்.

நேற்று நாடாளுமன்றத்துக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கொஹன்ன, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால், நிதி மைச்சின் செயலாளர் பி.பி. ஜயசுந்தர, மேல்மாகண ஆளுநர் அலவி மௌலான, கிழக்கு மாகாண ஆளுநர் மொஹான் விஜயவிக்ரம, சப்ரகமுவ ஆளுநர் ரெஜிரணதுங்க மற்றும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் ஆகியோர் வந்து பார்வையாளர் கலரியில் அமர்ந்திருந்தனர்.

வழமைபோல் அல்லாது மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பார்வையாளர்கள் நேற்று நாடாளுமன்றத்துக்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர். பாதுகாப்புக் காரணங்களுக்காகவே பார்வையாளர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது. ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினரும் இராணுவத்தினரும் அங்கு குவிக்கப்பட்டிருந்தனர்.

11.20 இற்கு ஜனாதிபதியின் உரை நிறைவு பெற்றதும் அவர் ஹெலிக்கொப்டரில் ஏறிச் சென்றுவிட்டார். (சி)

# போலியான இராஜதந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து தெரியவருகின்றது.

இலங்கை வெளிவிவகார அமைச்சின் சிபார்சின் பேரில் கருணாவுக்கு கோகில குணவர்த்தனா என்ற பெயரில் வலிதான பிரிட்டிஷ் விசாவை அந்நாட்டின் கொழும்புத் தூதரகம் செப்ரெம்பர் 5ஆம் திகதி வழங்கியது.

பிரித்தானியாவில் நடைபெறும் கால நிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில் கலந்துகொள்பவர்களுடையவை எனத் தெரிவித்து, மூன்றாம் தரப்புக் குறிப்பு ஒன்றுடன், ஒரு தொகுதி கடவுச்சீட்டுக்களை விஸா அனுமதிக்கான சிபாரிசுடன் வெளிவிவகார அமைச்சு பிரித்தானித் தூதரகத்துக்கு அனுப்பியிருந்தது என்பதும் -

அந்தக் கடவுச் சீட்டுத் தொகுதியில் கோகில குணவர்த்தனவின் பெயரிலான கடவுச்சீட்டும் இடம்பெற்றிருந்தது என்பதும் -

'த மோர்னிங் லீடரின்' விசாரணைகளில் இருந்து தெரியவந்திருக்கின்றது.

சுற்றுச் சூழல்துறை அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் அதிகாரத்துக்குக் கீழ் வரும் சுற்றுச்சூழல் துறை அமைச்சின் திணைக்களத்தைச் சேர்ந்த ஓர் அதிகாரியே கோகில குணவர்த்தன என்ற அடிப்படையிலேயே அவரின் பெயர் சிபார்சு செய்யப்பட்டிருந்தது.

கோகில குணவர்த்தன என்ற பெயரில் உள்ள கடவுச்சீட்டில் பயணமான கருணா ஹீத்ரோ விமான நிலையத்தில் செப்ரெம்பர் 18ஆம் திகதி வந்திறங்கியிருக்கின்றார்.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் லண்டனுக்கான விமானம் வரை அவரை விமான நிலைய மற்றும் விமானத்துறைப் பிரதித் தலைவர் சாலித விஜேசுந்தர கூட்டி வந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் விஜேசுந்தர அந்தத் தகவலை இன்னும் மறுக்கவில்லை.

### மனைவி வாழும் பகுதியில் வைத்தே கைதானார்

பிரித்தானியாவில் உள்ள பிரபல மான கென்சிங்டன் பகுதியில் வைத்தே கருணா பிரிட்டிஷ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார் என லண்டன் வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தப் பகுதியிலேயே கருணாவின் துணைவியாரும் மூன்று பிள்ளைகளும் வசித்து வருகின்றனர்.

கருணாவின் வசம் இருந்த - கோகில குணவர்தனா என்ற பெயருடைய - இராஜதந்திர கடவுச் சீட்டும் கருணா கைதான போது பிரிட்டிஷ் அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டது.

இதனிடையே கருணா கைதுசெய்யப்பட்டபோது அவர் தனக்கு அரசியல் தஞ்சம் அளிக்குமாறு கேட்டுக்கொண்டார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. கருணாவின் மனைவியும்,3 பிள்ளைகளும் முன்னர் பிரித்தானியாவுக்குள் நுழைந்துள்ளதுடன் அரசியல் தஞ்சத்திறகு விண்ணப்பித்துள்ளனர். அவர்களின் விண்ணப்பங்கள் தற்போது பிரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

பிரித்தானியாவின் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் கருணா தற்போது விசா ரணை செய்யப்பட்டு வருகின்றார்.

### வெளிவிவகார அமைச்சே விசா பெற்றுக்கொடுத்தது

எனினும் கருணாவுக்கு விசாவைப் பெற்றுக்கொடுப்பதற்கு தமது அமைச்சு பிரித்தானியா தூதரகத்திற்கு பரிந்துரைகள் எதனையும் வழங்கவில்லை என்றும் வெளிவிவகாரத்துறை அமைச்சின் செயலாளரான பாலித கொஹன்ன தெரிவித்துள்ளார். ஆனால் போலியான கடவுச்சீட்டின் அடிப்படையில் அவருக்கு விசா பெற்றுக்கொடுப்பதற்கு பரிந்துரைகள் செய்யப்பட்டனவா என்று கேட்கப்பட்டபோது அதற்கு அவர் பதில் கூற மறுத்துவிட்டார்.

இராஜதந்திரிகளுக்குரிய கடவுச்சீட்டுக்களை வழங்குவதில் உள்ள நடைமுறைகள் தொடர்பாகவும், தனிப்பட்டவர்களுக்கு இராஜதந்திரிகளுக்கான கடவுச்சீட்டுக்களை வழங்குவதை யார் முடிவு செய்வது என்பதும் குறித்தும் கேட்கப்பட்ட போது இந்தக் கேள்விகளை குடிவரவு - குடியகல்வு திணைக்களத்திடம் கேட்குமாறு பாலித கொஹன்ன தெரிவித்திருந்தார்.

ஆனால் ஜனாதிபதி அலுவலகம், ஜனாதிபதி அல்லது வெளிவிவகார அமைச்சு ஆகிய தரப்புகளின் பரிந்துரைகளின் அடிப்படையில்தான் இராஜதந்திரிகளுக்கான கடவுச்சீட்டுக்கள் வழங்கப்படுகின்றன என குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

- இப்படி அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# கண்காணிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிகேடியர் சு.ப.தமிழ்செல்வன் படுகொலை செய்யப்பட்ட பின்னர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேற்கொள்ளும் விஜயம் இதுவாகும்.

கொழும்பில் இருந்து வவுனியாசென்று ஓமந்தை ஊடாக அவர் கிளிநொச்சி செல்வார் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

# சென்னையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைத் எழுப்பி ப்தாகைகளைத் தாங்கி துணைத் தூதரகத்துக்கு செல்ல முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

அப்போது கொளத்தூர்மணி, தமிழர் தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் திருச்சி சௌந்தராஜன், தமிழ்மண் பதிப்பகம் இளவழகன், மார்க்சிய பெரியார் பொது உடைமைக் கட்சியின் பச்சை மலை, திராவிடர் இயக்கத் தமிழர் பேர வையின் அன்பு தென்னரசு, பெரியார் தி.க. துணைத்தலைவர் ஆனூர் ஜெகதீசன், வழக்கறிஞர் துரைச்சாமி உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோர் கைதுசெய்யப்பட்ட னர். (அ-1)

# முன்நகர்வு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாரிய அளவிலான திட்டமிடலுடன் நேற்று அதிகாலை செறிவான எறிகணைச் சூட்டாதரவுடனும் பீரங்கி உலங்கு வானூர்திகளின் தாக்குதல் ஒத்துழைப்புடனும் படையினர் கிளாலி முதல் முகமாலை வரையான முன்னரங்கப் பகுதியில் பல முனைகளில் இருந்து பாரியளவிலான முன்நகர்வை மேற்கொண்டனர்.

இந்நகர்வில் படையினரின் ரி.55 ரக போர்த்தாங்கிகள், கவச ஊர்திகள் ஆகியவற்றையும் பயன்படுத்தினர். அதிகாலை 5 மணி முதல் படையினர் மேற்கொண்ட இம் முன் நகர்வு காலை 8 மணிவரை நீடித்தது.

இம்முன்நகர்வுக்கு எதிராக விடுதலைப் புலிகள் தீவிர முறியடிப்புத் தாக்குதலை நடத்தினர்.

இத்தாக்குதலையடுத்து படையினர் காலை 8 மணிக்கு பலத்த இழப்புகளுடன் பழைய நிலைகளுக்கு விரட்டியடிக்கப்பட்டனர்.

### போர்த்தாங்கி சேதம்

பாரிய திட்டமிடலுடன் சிறிலாங்காப் படைக் கொமாண்டோக்கள் இம்முன்நகர்வில் ஈடுபட்டனர். இதில் படைத் தரப்பில் பலத்த இழப்புகள், சேதங்கள் ஏற்பட்டன. படையினரின் ரி-55 ரக போர்த் தாங்கி ஒன்று கடுமையாகச் சேதமாக்கப்பட்டுள்ளது. அந்தப் போர்த்தங்கியை படையினர் இழுத்துக்கொண்டு தமது நிலைகளுக்குத் தப்பினர் - என்றுள்ளது.

படையினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட போர்க்கருவிகளின் பட்டியலையும் விடுதலைப் புலிகள் வெளியிட்டனர். (அ)

CB Computer Academy
Station Road, Kondavil. 021-4590291
அனைவருக்கும் எமது
தீபத் திருநாள் வாழ்த்துக்கள்
10.11.07 (சனிக்கிழமை) அன்று
அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளும் ஆரம்பம்

தபால் பொதிகள் சேவை
தீபாவளியை முன்னிட்டு இன்று முதல் தபால் பொதிகள், ஆவணங்கள் என்பன பாதுகாப்பாகவும் விரைவாகவும் வெளிநாடுகளுக்கு அனுப்பும் சேவையை ஆரம்பிக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்
ஏசியன் தபால் நிலையம்
131, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 0773583879 ஹொட் லைன் : 0715635029

தீபாவளி வாழ்த்துக்கள்
வாடிக்கையாளரின் நன்மை கருதி இன்றும் எமது நிறுவனம் மதியம் வரை திறந்திருக்கும் என்பதை அறியத்தருகின்றோம்.
வெளிநாடுகளிலிருந்து சில மணி நேரத்தில் விரைவாகப் பணத்தைப் பெற்றிட
WESTERN UNION
குமார் ஏஜென்ட்
131, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே. 3354, 8354, 7727

## மரண அறிவித்தல்

### திருமதி ஆறுமுகம் இராசம்மா

அல்லைப்பிட்டி, முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நீராவியடி, 40, கடைச்சாமி வீதியை வதிவிடமாகவும் கொண்ட இராசம்மா நேற்று (07.11.2007) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்புமனைவியும் குணரட்ணம் (குணம் - சரஸ்வதி விலாஸ்),திருச்செல்வம் (செல்வம் - யாழ்.போன் சொப்), தவானந்தன்(அஜந்தா ஸ்ரோஸ் - கொழும்பு), மனோகரி, காலஞ்சென்ற இராஜரட்ணம், கோபாலசிங்கம், பாலச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தாயும் செல்வலட்சுமி தேவியம்மா, மகேஸ்வரி, லோகநாதன், கலாராணி,யோகலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியும்ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (09.11.2007) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியவில் அவரின் இல்லத்தில் இருந்து (40கடைச்சாமி வீதி,யாழ்ப்பாணம்) கோம்பயன் மணல் மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

*40, கடைச்சாமி வீதி,*
*நீராவியடி.*

தகவல்:
குணம்
(மகன் - சரஸ்வதி விலாஸ்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.11.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.